# 4

# விலைகள், கூலிகள், தொழில்நிலை மற்றும் உற்பத்தித்திறன்

## 4.1 பொதுநோக்கு

உத்தியோகபூர்வ நுகர்வோர் விலைச் சுட்டெண்களினால் அளவிடப்பட்டவாறான பொது விலைமட்டம் 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிலவிய சாதகமான காலநிலை நிலைமைகள் காரணமாக அக்காலப்பகுதியில் பெரும்பாலும் சரிவடைந்திருந்த உணவு வகைகளின் விலை அசைவுகளுக்கு இசைந்துசெல்லும் வகையில் பெருமளவில் தளம்பலடைந்தது. அதன் விளைவாக, ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் பணவீக்கமானது ஆண்டு காலப்பகுதியில் தாழ்வான மட்டத்தில் நிலைத்திருந்த வேளையில் ஆண்டுக்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கமானது ஒட்டுமொத்த சரிவடைந்த போக்கிற்கு நகர்ந்திருந்தது. 2018ஆம் ஆண்டு காலப்பகுதியின் பிற்பகுதியில் இலங்கை ரூபாவானது குறிப்பிடத்தக்களவு தேய்வடைந்திருந்த போதிலும் பெருமளவில் எதிர்பார்க்கப்பட்ட விலை மட்டங்களின் மீதான மேல்நோக்கிய அழுத்தமானது நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் நடத்தையிலிருந்து அவதானிக்கப்படவில்லை. இதற்கு, சிறப்பாக நிருவகிக்கப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்கள், பெரும்பாலான முக்கிய இறக்குமதிப் பொருட்கள் மீது விதிக்கப்பட்ட நிருவாகப்படுத்தப்பட்ட விலைப் பொறிமுறை மற்றும் 2018ஆம் ஆண்டின் இறுதி இரண்டு மாதங்களில் எண்ணெய் விலைகளில் அவதானிக்கப்பட்ட சரிவு என்பன காரணமாயிருந்தன. பணவீக்க எதிர்பார்ப்புக்கள், குறிப்பாக கம்பனித் துறையின் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் உண்மையான பணவீக்கத்துடன் நன்றாக இசைவுபட்டிருந்தன. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் குறுகியகால மற்றும் நீண்டகால பணவீக்க எதிர்பார்ப்புகளுக்கு இடையிலான இடைவெளி மேலும் அதிகரித்திருந்தது. உண்மைக் கூலிகளின் அபிவிருத்திகளின் அடிப்படையில், 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் சில குறிப்பிட்ட துறைகளில் தொழிலாளர் பற்றாக்குறையினால் பகுதியளவில் ஆதரவளிக்கப்பட்டு முறைசாரா தனியார் துறையில் மாத்திரம் ஒரு வளர்ச்சி அவதானிக்கப்பட்டிருந்த வேளையில், பொது மற்றும் முறைசார் தனியார் துறைகளில் உண்மைக் கூலிகளில் ஒரு தேய்வடைதல் அவதானிக்கப்பட்டது. அண்மைக் காலத்தில் அவதானிக்கப்பட்ட போக்கிற்கு மாறாக, முன்னைய ஆண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018இல் தொழிற்படையானது சரிவடைந்திருந்தது. மேலும், 2018இல் தொழிற்படை பங்கேற்பினுள்ளான பால்ரீதியான வேறுபாட்டிலான ஒரு விரிவு, தொழிலிலுள்ள குடித்தொகையிலான ஒரு சரிவு மற்றும் ஒட்டுமொத்த தொழிலின்மை வீதத்திலான ஒரு அதிகரிப்பு என்பன அவதானிக்கக்கூடியதாகவிருந்தன. பல்வேறுபட்ட துறைகளில் தொழிலாளர் பற்றாக்குறைப் பிரச்சனைகள் இருந்தபோதிலும் இளைஞர், பெண்கள் மற்றும் கல்வித் தகைமைபெற்ற வகைகளில் தொழிலின்மை வீதம் தொடர்ச்சியாக உயர்வான மட்டத்தில் நிலைத்திருந்தது. வெளிநாட்டு தொழில்நிலை வாய்ப்புக்களின் ஒரு சரிவடைவுக்கு மத்தியிலும், வீட்டுப் பணிப்பெண் வகையில் வெளிச்சென்ற பெண்களின் எண்ணிக்கை கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட சரிவடைந்த போக்கிற்கு மாறாக ஆண்டுகாலப்பகுதியில் அதிகரித்திருந்தது. இதேவேளையில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டுகாலப்பகுதியில் தனியார் துறைக் கைத்தொழில்களில் வேலைநிறுத்தங்கள் காரணமாக இழக்கப்பட்ட மொத்த நாட்களின் எண்ணிக்கையானது 14.4 சதவீதத்தினால் சரிவடைந்திருந்தபோதிலும் பெருந்தோட்டத் துறையில் இது குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தது.

## 4.2 விலைகள்

### பொது விலைமட்டத்தின் அசைவுகள்

**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு., 2013=100) மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொ.நு.வி.சு., 2013=100)[1] அளவிடப்பட்டவாறான பொதுவிலை மட்டமானது, 2018ஆம் ஆண்டுப் பகுதியில் கலப்பான அசைவுகளை காண்பித்ததுடன், பெரும்பாலும் உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளின் அசைவுகளையே பின்பற்றியிருந்தது.** 2018ஆம் ஆண்டின் பெரும்பாலான பகுதிகளில் காணப்பட்ட சாதகமான காலநிலை நிலைமைகளில் ஆதரவளிக்கப்பட்ட வழங்கல் பக்க மேம்பாடுகளின் காரணமாக, ஆண்டுக் காலப்பகுதியில் உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகள் பெரும்பாலும் தாழ்வான மட்டத்திலேயே காணப்பட்டன. 2018 திசெம்பரினைத்தவிர ஆண்டுக் காலப்பகுதியில் உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகள் ஒரு அதிகரித்த போக்கிலே நகர்ந்து பொதுவிலை மட்டத்தின் அசைவிற்கு பகுதியளவில் பங்களித்திருந்தது.

**முன்னைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்டவாறு, 2018ஆம் ஆண்டுகாலப்பகுதியில் தளம்பலடையும் உணவு[2] விலைகளின் அசைவுடன் உணவு வகையின் விலை அசைவுகள் நெருக்கமாக இசைந்து செல்வனவாகக் காணப்பட்டன.** 2018ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் தளம்பலடையும் உணவு விலைகளின் சரிவடைந்த போக்கிற்கு தேங்காய், உடன் மீன் மற்றும் உருளைக்கிழங்குகள் என்பனவற்றின் விலைகளில் அவதானிக்கப்பட்ட இடைக்கால சரிவுகளுக்கு மேலதிகமாக அரிசி, மரக்கறிகள் மற்றும் வெங்காயம் என்பனவற்றின் விலைகளில் அவதானிக்கப்பட்ட சரிவினால் பிரதானமாக உந்தப்பட்டது. பருவகாலமற்ற காலப்பகுதியில் வழங்கல் பற்றாக்குறையின் காரணத்தினால் உடன் மீன், மரக்கறிகள், உருளைக்கிழங்குகள் மற்றும் வெங்காயங்கள் போன்ற தளம்பலடையும் உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகள் குறிப்பாக மே மற்றும் யூன் காலப்பகுதியில் அதிகரித்திருந்தன. இதன்பின்னர், தளம்பலடையும் உணவுகளின் விலைகள் ஓகத்து தொடக்கம் ஒத்தோபர் வரையான காலப்பகுதியில் சரிவடைந்திருந்ததுடன், இது அரிசி, தேங்காய், உடன் மீன் மற்றும் மரக்கறிகள் என்பவற்றின் விலைச் சரிவுகளே பிரதான காரணமாக அமைந்தன. சாதகமற்ற காலநிலை நிலைமைகளினால் வழங்கல் பக்கத்தில் ஏற்பட்ட இடையூறுகளின் பிரதானமான காரணத்தினால் நவெம்பரில் தளம்பலடையும் உணவுகளின் விலைகளில் ஒரு குறிப்பிடத்தக்களவு விலை அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், திசெம்பரில் தளம்பலடையும் உணவு வகைகளின் விலைகள் ஒப்பீட்டளவில் தாழ்ந்தமட்டத்திலேயே காணப்பட்டது. சாதகமான காலநிலை நிலைமைகளின் காரணமாக நெல் உற்பத்தியின் மீட்சியின் பிரதானமான காரணத்தினால், 2018ஆம் ஆண்டில் பல்வேறுபட்ட அரிசி வகைகளின் விலைகள் மெதுவடைந்திருந்தது. சாதகமான காலநிலை நிலைமைகளின் விளைவாக தேங்காய் உற்பத்தியிலான மீட்சி மற்றும் 2017 திசெம்பரிலிருந்தான தேங்காய் கொப்பறைகளின் இறக்குமதிகள் என்பனவற்றின் காரணமாக தேங்காய் விலை 2018ஆம் ஆண்டு முழுவதும் சரிவடைந்திருந்தன. ஆண்டின் ஆரம்பகாலத்தில் தாழ்வான மட்டத்தில் காணப்பட்ட உடன் மீன் விலைகள் இரண்டாம் காலாண்டில் விரைவாக அதிகரித்திருந்ததுடன் இதற்கு சாதகமற்ற காலநிலை நிலைமைகள் மற்றும் அரசாங்கத்தின் மண்ணெண்ணெய் விலைகளின் அதிகரிப்பிற்கு எதிராக மீனவர்களின் ஆர்ப்பாட்டங்களிலிருந்து விளைவான தாழ்வான உற்பத்தியே காரணமாக அமைந்தது. எவ்வாறாயினும், 2018இன் எஞ்சிய காலப்பகுதியில் மீன் விலைகள் இலகுவடைந்திருந்தன.

**தளம்பலடையும் உணவு வகைகளின் விலைகளின் அசைவுகளுக்கெதிராக, தளம்பலடையும் உணவு வகை நீங்கலாக உணவு வகையின் விலைகளானது 2018இல் ஒரு ஒட்டுமொத்த அதிகரித்த போக்கிற்கு நகர்ந்திருந்ததுடன், இதற்கு பால்மா, கருவாடு, பாண், கோதுமை மா, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் போன்ற வகைகளில் அவதானிக்கப்பட்டவாறான இடைக்கால விலை உயர்வுகளே பிரதான காரணங்களாகவிருந்தன.** உலக சந்தையின் விலை அபிவிருத்திகளை கவனத்திற்கொண்டு, ஏறத்தாழ மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் 400 கிறாம்

அட்டவணை 4.1
தெரிவுசெய்யப்பட்ட உணவு வகைகளின் சிறப்பு பண்டத்தீர்வை திருத்தங்கள்

| விடயம் | திருத்தத்திற்கு முன் (ரூ. கி.கி ஒன்றிற்கு) | திருத்தத்திற்கு பின் (ரூ. கி.கி ஒன்றிற்கு) | நடைமுறைக்கு வரும் திகதி |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம் | 1.00 | 40.00 | 02.05.2018 |
| | 40.00 | 20.00 | 04.12.2018 |
| இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு | 30.00 | 40.00 | 02.05.2018 |
| | 40.00 | 20.00 | 04.12.2018 |
| பருப்பு | | | |
| முழுமையானது | 1.00 | 7.00 | 09.05.2018 |
| | 7.00 | 2.00 | 02.11.2018 |
| உடைக்கப்பட்டது | 3.00 | 12.00 | 09.05.2018 |
| | 12.00 | 7.00 | 02.11.2018 |
| இறக்குமதி செய்யப்பட்ட அரிசி | 30.04.2018 வரைக்கும் கிலோகிராம் ஒன்றிற்கு 0.25 சதங்களாக காணப்பட்டது (அ) | | |


(அ) 2018 மே 01இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பொதுத்தீர்வையானது கிலோகிராம் ஒன்றிற்கு ரூ.50.00 அல்லது சரக்குக் கட்டணம் உள்ளடங்களாக செலவுப் பெறுமதியில் 30% என்பவற்றுல் ஒன்றை உள்ளடக்குகின்றது. இவற்றுக்கு மேலாக, இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் மீது 15% பெறுமதிசேர் வரி, 7.5% துறைமுக வானூர்தி தீர்வை மற்றும் 2% தேசத்தை கட்டியெழுப்பும் வரி என்பனவும் அமுல்படுத்தப்பட்டன.

*மூலம்* : நிதி அமைச்சு

1 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு 2013=100) மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொ.நு.வி.சு 2013=100) ஆகிய மாதாந்த அடிப்படையிலான உத்தியோகபூர்வ விலைச் சுட்டெண்களைத் தொகுக்கின்றது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது தேசிய ரீதியில் தேர்வு செய்யப்பட்ட பொருட்களுக்கான விலைப்போக்கினை விபரிப்பதுடன் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது அவற்றின் கொழும்பு மாவட்டத்திலுள்ள நகர்புற வீட்டலகுகளைப் பிரதிபலிக்கின்றது.

2 தளம்பலடையும் விலைகளைக் கொண்ட உணவு அரிசி, இறைச்சி, உடன்மீன் மற்றும் கடலுணவு, தேங்காய், உடன் பழங்கள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு, வெங்காயங்கள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட கறிச்சரக்கை உள்ளடக்குகிறது.

வரைபடம் 4.1 விலைகள், கூலிகள் மற்றும் தொழில்நிலை நிழற்படம் - 2018




4

அட்டவணை 4.2
உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட முக்கிய பொருட்களின் சில்லறை விலைகள்

| விடயம் | அலகு | ஆண்டுச் சராசரி | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | விலை - ரூபா | | | சதவீத மாற்றம் | |
| | | 2016 | 2017 | 2018 | 2017/ 2016 | 2018/ 2017 |
| உள்நாட்டு அரிசி - சம்பா | 1 கி.கி | 92.75 | 98.79 | 109.33 | 6.5 | 10.7 |
| பச்சையரிசி (சிவப்பு) | 1 கி.கி | 69.52 | 87.94 | 83.18 | 26.5 | -5.4 |
| பச்சையரிசி (வெள்ளை) | 1 கி.கி | 72.12 | 83.64 | 83.35 | 16.0 | -0.3 |
| நாட்டரிசி | 1 கி.கி | 78.71 | 94.37 | 95.08 | 19.9 | 0.8 |
| உயர்நிலக் காய்கறிகள் - அவரை | 1 கி.கி | 204.75 | 192.36 | 241.09 | -6.1 | 25.3 |
| கரட் | 1 கி.கி | 188.86 | 193.98 | 237.94 | 2.7 | 22.7 |
| கோவா | 1 கி.கி | 154.71 | 155.38 | 177.64 | 0.4 | 14.3 |
| பீட்ரூட் | 1 கி.கி | 165.81 | 163.14 | 182.43 | -1.6 | 11.8 |
| தாழ்நிலக் காய்கறிகள் - கத்தரி | 1 கி.கி | 133.08 | 161.72 | 167.32 | 21.5 | 3.5 |
| வெண்டிக்காய் | 1 கி.கி | 139.29 | 148.89 | 167.02 | 6.9 | 12.2 |
| சுரக்காய் | 1 கி.கி | 155.58 | 192.23 | 177.71 | 23.6 | -7.6 |
| பாகற்காய் | 1 கி.கி | 200.51 | 236.98 | 229.05 | 18.2 | -3.3 |
| தேங்காய் (நடுத்தரம்) | காய் | 46.12 | 67.67 | 69.31 | 46.7 | 2.4 |
| மீன் - கெலவல்ல | 1 கி.கி | 860.68 | 950.17 | 956.40 | 10.4 | 0.7 |
| முட்டைகள் | ஒவ்வொன்றும் | 16.10 | 14.08 | 16.10 | -12.5 | 14.3 |
| இறக்குமதிகள் சீனி | 1 கி.கி | 100.69 | 107.48 | 107.73 | 6.7 | 0.2 |
| பால்மா | 400 கிறாம் | 325.00 | 325.00 | 337.33 | 0.0 | 3.8 |
| சிவப்பு பருப்பு | 1 கி.கி | 191.16 | 180.52 | 148.50 | -5.6 | -17.7 |
| கோதுமை மா | 1 கி.கி | 89.66 | 89.33 | 91.59 | -0.4 | 2.5 |

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்



4

பக்கற்றின் விலை 2018 மே 04 இலிருந்து ரூ.20 இனால் அதிகரிக்கப்படும் வகையில் பால்மாவின் விலையில் சீர்திருத்தம் நடைபெற்றது. எவ்வாறாயினும், 2018 செத்தெம்பர் 19 இலிருந்து அமுலுக்குவரும் வகையில் பால்மாவின் விலையில் கி. கிறாமிற்கு ரூ.50 சுங்கத்தீர்வை விலக்களிப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. கோதுமை மா மற்றும் பாண் என்பனவற்றின் விலைகள் தலா ரூ.5 வீதம் முறையே 01 மற்றும் 04 செத்தெம்பர் 2018 முதல் அமுலுக்குவரும் வகையில் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. 2017இல் அவதானிக்கப்பட்டவாறான அதிகரித்த போக்கினை மீள்திருப்பும் வகையில், சீனியின் விலையானது 2018 செத்தெம்பர் மற்றும் ஒத்தோபரில் அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்களவு விலை உயர்வினைத் தவிர 2018இல் ஒரு ஒட்டுமொத்த சரிவான போக்கிற்கு நகர்ந்திருந்தது. மேலும், விலை அழுத்தத்தினைக் கட்டுப்படுத்தும் முகமாக பொதிசெய்யப்படாத மற்றும் பொதிசெய்யப்பட்ட வெள்ளைச் சீனியின் அதிகபட்ச சில்லறை விலைகளாக 2018 ஒத்தோபர் 13 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் முறையே ரூ.100 மற்றும் ரூ.105 ஆக விதிக்கப்பட்டன. பருப்பு மீதான விசேட பண்டத் தீர்வையானது 2018 மே மாதத்தில் மேல்நோக்கித் திருத்தப்பட்டதுடன் 2018 நவெம்பர் கீழ்நோக்கி திருத்தப்பட்டது. அதன்விளைவாக, ஆண்டுக் காலப்பகுதியில் பருப்பின் விலையானது சரிவடைந்த போக்கினையே கொண்டிருந்தது. முன்னைய பல ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், பருப்பின் விலையானது 2018இல் தாழ்வான மட்டத்திலேயே காணப்பட்டமையானது ஒரு குறித்துக்காட்டப்பட வேண்டியதாகும்.

**உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகள் 2018 திசெம்பர் தவிர ஆண்டுக் காலப்பகுதியில் ஒரு அதிகரித்த போக்கிலே நகர்ந்திருந்தது.** உலகளாவிய எரிபொருள் விலை அசைவுகளுக்கு ஏற்றவிதத்திலான எரிபொருள் விலைகளை நிர்ணயிப்பதற்கான விலையிடல் பொறிமுறையின் அறிமுகத்துடன் மே, யூலை, செத்தெம்பர் மற்றும் ஒத்தோபர் மாதங்களில் மேல்நோக்கிய திருத்தங்கள் இடம்பெற்றதுடன் நவெம்பர் மற்றும் திசெம்பர் காலப்பகுதியில் கீழ்நோக்கிய திருத்தங்களும் இடம்பெற்றன. எரிபொருள் விலைத் திருத்தங்களுக்கு ஏற்றவாறு, ஆண்டுக் காலப்பகுதியில் பேருந்துக் கட்டணங்கள் மற்றும் முச்சக்கரவண்டிக் கட்டணங்கள் மீதான மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய விலைத்திருத்தங்களும் நடைபெற்றன. இவ்வேளையில், பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, 2018 ஒத்தோபர் 01 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் புகையிரதக் கட்டணத்தில் ஒரு 15 சதவீத மேல்நோக்கிய விலைத்திருத்தம் விதிக்கப்பட்டது. எவ்வாறாயினும், குறைந்தளவான புகையிரதக் கட்டணம் மாற்றமடையாது பேணப்பட்டது. மேலும், உலக சந்தையில் உயர்வடையும் வாயுவின் விலைகள் மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிரான தேய்வடையும் இலங்கை ரூபாய் என்பவற்றினை கருத்திற்கொண்டு ஆண்டுக்காலப்பகுதியில் பல்வேறு விலைத் திருத்தங்களுக்கு உட்பட்டதுடன் திரவப் பெற்றோலிய வாயுவின் விலையானது ஒரு ஒட்டுமொத்த உயர்வினைக் காண்பித்தது. இது திருப்புமுனையாக, உணவு விடுதிகள் மற்றும் சுற்றுலா விடுதிகளின் துணைத் துறையில் தயாரிக்கப்படும் உணவு வகைகளிலான விலை அதிகரிப்பிற்குப்

வரைபடம் 4.2

2018இல் உணவல்லா பண்டங்கள் தொடர்பான நிருவாக விலைத் திருத்தங்கள் - 2018

| | | விலைத் திருத்தத்திற்கு முன் | விலைத் திருத்தத்திற்கு பின் | விலைத் திருத்தம் | நடைமுறைக்கு வரும் திகதி |
|---|---|---|---|---|---|
| பெற்றோல் 92 (அ) (ரூ.)  | இ.பெ.கூ (ஆ) | 117.00 | 137.00 | 20.00 | 11.05.2018 |
| | | 137.00 | 145.00 | 8.00 | 11.07.2018 |
| | | 145.00 | 149.00 | 4.00 | 11.09.2018 |
| | | 149.00 | 155.00 | 6.00 | 11.10.2018 |
| | | 155.00 | 145.00 | -10.00 | 02.11.2018 |
| | | 145.00 | 140.00 | -5.00 | 16.11.2018 |
| | | 140.00 | 135.00 | -5.00 | 01.12.2018 |
| | | 135.00 | 125.00 | -10.00 | 22.12.2018 |
| | எல்.ஐ.ஓ.சி. (இ) | 126.00 | 137.00 | 11.00 | 11.05.2018 |
| | | 137.00 | 146.00 | 9.00 | 06.07.2018 |
| | | 146.00 | 150.00 | 4.00 | 11.09.2018 |
| | | 150.00 | 155.00 | 5.00 | 11.10.2018 |
| | | 155.00 | 153.00 | -2.00 | 03.11.2018 |
| | | 153.00 | 148.00 | -5.00 | 16.11.2018 |
| | | 148.00 | 143.00 | -5.00 | 01.12.2018 |
| | | 143.00 | 133.00 | -10.00 | 22.12.2018 |
| தன்னியக்க டீசல் (அ) (ரூ.)  | இ.பெ.கூ (ஆ) | 95.00 | 109.00 | 14.00 | 11.05.2018 |
| | | 109.00 | 118.00 | 9.00 | 11.07.2018 |
| | | 118.00 | 123.00 | 5.00 | 11.09.2018 |
| | | 123.00 | 116.00 | -7.00 | 02.11.2018 |
| | | 116.00 | 111.00 | -5.00 | 16.11.2018 |
| | | 111.00 | 106.00 | -5.00 | 01.12.2018 |
| | | 106.00 | 101.00 | -5.00 | 22.12.2018 |
| | எல்.ஐ.ஓ.சி. (இ) | 100.00 | 111.00 | 11.00 | 11.05.2018 |
| | | 111.00 | 118.00 | 7.00 | 06.07.2018 |
| | | 118.00 | 123.00 | 5.00 | 11.09.2018 |
| | | 123.00 | 129.00 | 6.00 | 11.10.2018 |
| | | 129.00 | 118.00 | -11.00 | 03.11.2018 |
| | | 118.00 | 111.00 | -7.00 | 16.11.2018 |
| | | 111.00 | 106.00 | -5.00 | 01.12.2018 |
| | | 106.00 | 101.00 | -5.00 | 22.12.2018 |
| மண்ணெண்ணெய் (அ) (ரூ.)  | | 44.00 | 101.00 | 57.00 | 11.05.2018 |
| | | 101.00 | 70.00 | -31.00 | 13.06.2018 |
| திரவப்பெற்றோலிய வாயு (ஈ) (ரூ.)  | | 1431.00 | 1676.00 | 245.00 | 28.04.2018 |
| | | 1676.00 | 1538.00 | -138.00 | 30.06.2018 |
| | | 1538.00 | 1733.00 | 195.00 | 27.09.2018 |
| பஸ் கட்டணம்  | | | | 12.5% | 23.05.2018 |
| | | | | 4.0% (உ) | 21.09.2018 |
| | | | | -4.2% (உ) | 27.12.2018 |
| புகைவண்டிக் கட்டணம் (உ)  | | | | 15% | 01.10.2018 |

(அ) லீற்றர் ஒன்றிற்கான விலைத்திருத்தம்
(ஆ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
(இ) லங்கா ஐ.ஓ.சீ. பி.எல்.சி.
(ஈ) 12.5 கிலோகிராம் திரவப்பெற்றோலிய வாயுவின் விலைத்திருத்தம் கருத்திற்கொள்ளப்பட்டது.
(உ) குறைந்தளவான கட்டணமானது திருத்தப்படவில்லை.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

4

பங்களித்தது. ஆண்டின் ஆரம்பக் காலப்பகுதியில் இரண்டாந்தரக் கல்விக்கான பிரத்தியேக வகுப்புக் கட்டணத்தில் ஒரு அதிகரிப்பு அவதானிக்கப்பட்டிருந்த வேளையில், 2018 நவெம்பரில் ஆய்வுகூடப் பரிசோதனைகளுக்கான கொடுப்பனவுகள் மற்றும் தனியார் வைத்தியசாலைகளின் அறைக்கான கட்டணங்கள் என்பவற்றின் மீதான ஒரு குறிப்பிடத்தக்களவு விலை அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. உள்நாட்டு நாணயத்தின் தேய்மானம் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் ஆடை மற்றும் காலணி துணை வகையிலுள்ள பொருட்களின் விலைகள் அதிகரித்திருந்தன. எவ்வாறாயினும், நுகர்வோர் விலைச் சுட்டெண் மீதான இதன்தாக்கம் சார்பளவில் குறைந்தளவிலான நிறையினைக் கொண்டிருந்தமையினால் குறைவாகவே இருந்தது.

## நுகர்வோர் விலைச் சுட்டெண்கள்

### தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்

4

**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் சனவரியில் 125.8 சுட்டெண் புள்ளிகளைப் பதிவுசெய்து திசெம்பரில் 127.1 சுட்டெண் புள்ளிகளை அடைந்ததுடன் 2018 காலப்பகுதியில் ஒரு கலப்பான அசைவுகளையே காட்சிப்படுத்தியது.** பிரதானமாக உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளில் அவதானிக்கப்பட்ட சரிவின் காரணமாக மாதாந்த அடிப்படையிலான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது ஆண்டின் முதல் மூன்று மாதகாலப்பகுதியில் குறைவடைந்திருந்ததுடன், அதன்பின்னர் யூலை வரை உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலை அதிகரிப்பின் காரணமாக அதிகரித்திருந்தது. இவ்வேளையில், 2018 மே மற்றும் யூனில் அவதானிக்கப்பட்ட மாதாந்த அடிப்படையிலான அதிகரிப்பிற்கு உணவு வகையிலுள்ள பொருட்களில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்களும் பங்களித்திருந்தன. மாதாந்த அடிப்படையிலான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஓகத்து மற்றும் செத்தெம்பர் மாதத்திலான சரிவிற்கு உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளின் குறைவு காரணமாக அமைந்திருந்த வேளையில் ஒத்தோபரில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலான அதிகரிப்பானது உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகளின் அதிகரிப்பினாலேயே முற்றிலும் உந்தப்பட்டது. உணவு மற்றும் உணவல்லா வகையிலுள்ள விலைகளின் அபிவிருத்திகள் காரணமாக தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் நவெம்பரில் அதிகரித்திருந்த வேளையில் திசெம்பரில் குறைவடைந்திருந்தது.

### கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்

**ஆண்டுகாலப்பகுதியில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை ஒத்தவாறான ஒரு அசைவினையே கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணும் காண்பித்தது.** கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது 2018 சனவரியில் 122.8 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 2018 திசெம்பரில் 126.3 சுட்டெண் புள்ளிகளுக்கு அதிகரித்திருந்தது. பங்களிப்புக்களின் அடிப்படையில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலான மாற்றமானது உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளின் அசைவிற்கு ஏற்றவாறே பிரதானமாகக் காணப்பட்டதுடன், குறிப்பிட்ட சில மாதங்களில் மட்டுமே உணவல்லா வகையின் பொருட்களின் விலைகளின் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பு காணப்பட்டது. மாதாந்த அடிப்படையில் உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளின் குறைவுக்கு ஏற்றவாறு 2018இன் முதல் மூன்று மாதகாலப்பகுதியில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், உணவு மற்றும் உணவல்லா வகைகளின் பொருட்களின் விலைகளிலான உயர்வின் காரணத்தினால் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது 2018 ஓகத்து வரை அதிகரித்தது. ஏப்பிறல் மற்றும் ஓகத்து மாதத்திலான கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவானது உணவல்லா வகையிலான விலைகளின் அதிகரிப்பினால் மாத்திரமே உந்தப்பட்டது. இதன்பின்னர், சரிவடைகின்ற உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளுக்கு பதில்கூறும் வகையில் ஒத்தோபர் வரையில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் குறைவடைந்திருந்தது. உணவு மற்றும் உணவல்லா வகை இரண்டிலுமான பொருட்களின் விலைகளின் அதிகரிப்பின் பங்களிப்பினால் 2018 நவெம்பரில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அதிகரித்திருந்ததுடன் உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளின் அதிகரிப்பின் பங்களிப்பினால் திசெம்பரில் அதிகரித்திருந்தது.


அட்டவணை 4.3
விலைச் சுட்டெண்களில் ஏற்பட்ட மாற்றங்கள்

| சுட்டெண் | சுட்டெண் (ஆண்டு இறுதி) | | ஆண்டுக்காண்டு சதவீத மாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 (அ) | திசெ.2017/ திசெ.2016 | திசெ.2018/ திசெ.2017 (அ) | 2017/2016 | 2018/2017 (அ) |
| தே.நு.வி.சு (2013=100) | 126.6 | 127.1 | 7.3 | 0.4 | 7.7 | 2.1 |
| கொ.நு.வி.சு (2013=100) | 122.9 | 126.3 | 7.1 | 2.8 | 6.6 | 4.3 |
| உ.வி.சி (2013 4ம் காலாண்டு=100) | 131.8 (ஆ) | 137.5 | 14.3 | 4.3 | 17.0 | 6.3 |
| மொ.உ.உ சுருக்கி (2010=100) | 143.6 (அ)(ஆ) | 149.8 | - | - | 8.2 (அ)(ஆ) | 4.3 |

(அ) தற்காலிகமானது
(ஆ) திருத்தப்பட்டது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

வரைபடம் 4.3
தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும்
கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்களின் வருடாந்த சராசரி பங்களிப்பு - 2018




*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## முதன்மைப் பணவீக்கம்

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்படும் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்படுகின்ற முதன்மைப் பணவீக்கம் 2018இல் கலப்பான அசைவுகளுடன் ஒட்டுமொத்தமாக சரிவடைந்து செல்லும் போக்கொன்றினை எடுத்துக்காட்டியது. அதன்படி, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டுக்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கம் சனவரியில் பதிவுசெய்யப்பட்ட 5.4 சதவீதத்தினை தவிர 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 4 சதவீதத்திற்குக் கீழாகவே காணப்பட்டது. 2018 ஒத்தோபரில் முதன்மைப் பணவீக்கம் 0.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து 2016 சனவரியிலிருந்தான தாழ்வான பெறுமதியினை பதிவுசெய்தது. அவதானிக்கப்பட்ட தாழ்ந்த அளவிலான முதன்மைப் பணவீக்கத்திற்கு உயர்ந்த அளவிலான உணவு விலைகளின் காரணத்தினால் 2017இல் நிலவிய உயர்வான தளமே பிரதானமான காரணமாக அமைந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான

வரைபடம் 4.4
தேறிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் ஆண்டுக்காண்டு சதவீத மாற்றத்திற்கான பங்களிப்பு 2018




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

4

உணவுப் பணவீக்கம் ஆண்டுகாலப்பகுதியில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் முதன்மைப் பணவீக்கத்தின் போக்கிற்கு ஏற்றவாறே காணப்பட்டது. 2018 ஒத்தோபரில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான உணவுப் பணவீக்கமானது -6.6 சதவீதமாக இருந்ததுடன் 2016 சனவரியிலிருந்தான ஒரு குறைவினைப் பதிவுசெய்தது. எவ்வாறாயினும், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான உணவல்லாப் பணவீக்கமானது 2018இன் முதல் பத்துமாதங்களில் ஒரு அதிகரிக்கும் போக்கினைக் காண்பித்ததுடன் அதன்பின்னர் சரிவடைந்தது. இதேவேளையில், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் அவதானிக்கப்பட்ட அதிகரிக்கும் போக்கினை மாற்றியமைத்து 2018 சனவரியின் 7.6 சதவீதத்திலிருந்து தொடர்ச்சியாக 2018 திசெம்பரின் 2.1 சதவீதத்திற்கு சரிவடைந்தது.


**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தினை அடிப்படையாகக் கொண்டு அளவிடப்படும் முதன்மைப் பணவீக்கமானது 2018இன் முதல் ஒன்பது மாதக் காலப்பகுதியில் பெரும்பாலும் 4.0 - 6.0 வரையிலான இலக்கிடப்பட்ட பிரிவிலே காணப்பட்டதுடன் அதன்பின்னர் 4.0 சதவீதத்திற்குக் கீழாக குறைவடைந்தது.** சனவரியிலிருந்து மாச்சு வரையிலான காலப்பகுதியில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கத்தில் அவதானிக்கப்பட்ட சரிவிற்கு உணவு வகையிலுள்ள பொருட்களின் சரிவடைந்திருந்த விலைகளே காரணமாக அமைந்தன. இது மே தொடக்கம் ஓகத்து வரையிலான காலப்பகுதியில் ஒரு அதிகரித்த போக்கினை தொடர்ந்ததுடன் ஓகத்து மாதத்தில் 5.9 சதவீதத்திலான ஒரு உயர்வினை பதிவுசெய்து பின்னர் படிப்படியாக சரிவடைந்து திசெம்பரில் 2.8 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கத்தில் 2018 ஏப்பிறல் மாதத்திலான குறைவுக்கும் ஓகத்து மாதத்திலான அதிகரிப்பிற்கும் தளத்திலான தாக்கம் மாத்திரமே பங்களிப்பு செய்திருந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான உணவுப் பணவீக்கமானது சனவரி 2016 இலிருந்தான ஒரு தாழ்வான பெறுமதியான -2.3 சதவீதத்தினை ஒத்தோபரில் பதிவுசெய்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான ஆண்டுச் சராசரிப் பணவீக்கமானது 2018 சனவரியில் 6.6 சதவீதத்திலிருந்து 2018 திசெம்பரில் 4.3 சதவீதத்திற்கு சரிவடைந்ததுடன், 2018 யூன் தொடக்கம் ஓகத்து வரையிலான தொடர்ச்சியான மூன்று காலப்பகுதியில் 5.6 சதவீதத்தினைப் பதிவுசெய்தது.

**உத்தியோகபூர்வ விலைச் சுட்டெண்களின் நுகர்வோர் கூடையிலுள்ள இறக்குமதிப் பொருட்களிலிருந்து எழுகின்ற பணவீக்கமானது 2018ஆம் ஆண்டின் தொடக்க மாதங்களில் சரிவடைந்ததுடன், ஒத்தோபரில் தன்னுடைய போக்கினை மாற்றி ஒரு உயர்வினை பதிவுசெய்ததுடன் அதற்குப்பின்னர் சரிவடைந்திருந்தது.** உள்நாட்டுச் சந்தையில் எரிபொருள் விலைகளின் கீழ்நோக்கிய திருத்தங்களுடன் பல்வேறு வகையான முக்கியமான இறக்குமதிப் பொருட்கள் மீது விதிக்கப்படுகின்ற நிருவகிக்கப்படும் விலையிடல் பொறிமுறையானது 2018இன் பிற்பகுதியில் அவதானிக்கப்பட்ட சரிவடைதலுக்கு பங்களித்திருந்தது. மேலும், பேருந்துக் கட்டணங்கள் மற்றும் விசேட பண்டத் தீர்வைகள் என்பவற்றிலான குறைவு, சந்தைப் போட்டி மற்றும் வேளாண்மை துறையிலான மீட்சி என்பன ஆண்டின் இறுதிப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு தேய்வடைந்த ரூபாவிற்கு மத்தியிலும் குறைவான பணவீக்க மட்டங்களை எய்துவதற்கு சாதகமாகப் பங்களித்தன.

## மையப் பணவீக்கம்

**பொருளாதாரத்தின் அடிப்படைப் பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற ஆண்டுக்கு ஆண்டு தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கம்**

வரைபடம் 4.5
கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் ஆண்டுக்காண்டு சதவீத மாற்றத்திற்கான பங்களிப்பு - 2018




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 4.6
மையப் பணவீக்கத்தின் அசைவுகள்
(ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்)





*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

**ஆண்டுப்பகுதியில் குறைவான மட்டத்திலே தொடர்ந்தும் காணப்பட்டது.** 2018இன் முதல் ஐந்து மாதங்களில், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான மையப் பணவீக்கம் 2018 சனவரியில் 2.1 சதவீதத்திலிருந்து படிப்படியாக குறைவடைந்து 1.7 சதவீதத்தினை 2018 மேயில் பதிவுசெய்தது. எவ்வாறாயினும், அதனைத் தொடர்ந்து இவ்வாண்டில் உயர்வுப் பெறுமதியான 3.4 சதவீதத்தினை ஒத்தோபரில் பதிவுசெய்ததுடன் 2018 நவெம்பர் மற்றும் திசெம்பரில் 3.1 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. உணவு மற்றும் உணவல்லா வகைகளின் பொருட்களின் விலைகள் இரண்டிலும் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக் காரணமாக யூன் தொடக்கம் செத்தெம்பர் வரைக்கும் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதுடன் ஒத்தோபரில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்பிற்கு உணவல்லா வகையின் பொருட்களின் விலைகள் அதிகரிப்பு மாத்திரமே பிரதான காரணமாக அமைந்தன. இதேவேளையில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான ஆண்டுக்கு ஆண்டு மையப் பணவீக்கமானது 2018 திசெம்பரில் 3.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைவதற்கு முன்னதாக சனவரியில் 3.5 சதவீதத்திலிருந்து யூலையில் 3.9 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான மையப் பணவீக்கத்தின் அசைவுகள் உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகளின் அசைவிற்கு ஏற்றவாறு நகர்ந்ததுடன், இதற்கு கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் கூடையில் அதிகளவு நிறையினை கொண்டிருப்பதே காரணமாக அமைகின்றது.

## உற்பத்தியாளர் விலைப் பணவீக்கம்

**உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணின் (உ.வி.சு., 2013 கா4=100) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்படுகின்ற உற்பத்தியாளர் விலைப் பணவீக்கமானது ஆண்டு காலப்பகுதியில் கலப்பான அசைவுகளுடன் ஒட்டுமொத்தமாக சரிவடையும் போக்கினைப் பிரதிபலித்திருந்தது.** வேளாண்மைத் துணைத் துறையின் ஆண்டுக்கு ஆண்டு உற்பத்தியாளர்

வரைபடம் 4.7
உற்பத்தியாளர் விலைச்சுட்டெண்ணின் அசைவுகள் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்)




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

அட்டவணை 4.4
துறைரீதியான சுருக்கிகளும் மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியும்

(2010=100)

| துறை | சுட்டெண் | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | 2016 (அ) | 2017 (அ)(ஆ) | 2018 (ஆ) | 2017/2016 (அ)(அ) | 2018/2017 (ஆ) |
| வேளாண்மை | 138.2 | 162.6 | 169.0 | 17.6 | 4.0 |
| கைத்தொழில் | 139.2 | 146.7 | 154.8 | 5.4 | 5.5 |
| பணிகள் | 132.1 | 140.7 | 147.7 | 6.6 | 4.9 |
| **மொ.உ.உ** | **132.8** | **143.6** | **149.8** | **8.2** | **4.3** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம்

விலைப் பணவீக்கமானது 2018 ஒத்தோபர் வரையில் குறைவடைந்திருந்து அதன்பின்னர் அதிகரித்திருந்த வேளையில் தயாரிப்புத் துணைத் துறையின் அதே பணவீக்கமானது குறித்த ஆண்டுகாலப்பகுதியில் கலப்பான அசைவுகளுடன் ஒரு ஒட்டுமொத்த அதிகரிப்பைக் காண்பித்திருந்தது. எவ்வாறாயினும், 2018ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் துணைத் துறையின் உற்பத்தியாளர் விலைப் பணவீக்கமானது நிலையாகப் பேணப்பட்டிருந்தது.

4

## மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி

**பொருளாதாரத்தில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை அசைவினை அளவிடுகின்ற மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியானது பிரதானமாக வேளாண்மை மற்றும் பணிகள் சார்ந்த நடவடிக்கைகள் இரண்டிலும் அவதானிக்கப்பட்ட குறைந்தளவிலான விலை அசைவுகளின் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டுகாலப்பகுதியில் குறைவடைந்திருந்தது.** அதன்படி, ஒட்டுமொத்த மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியானது 2017இன் 8.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 4.3 சதவீதத்திற்கு குறைவடைந்திருந்தது. வேளாண்மைத் துறையின் சுருக்கியானது 2017இன் 17.6 சதவீதத்திலிருந்து 2018இல் 4.0 சதவீதமாக குறிப்பிடத்தக்களவு சரிவடைந்திருந்த வேளையில் பணிகள் துறையின் சுருக்கியானது 6.6 சதவீதத்திலிருந்து 4.9 சதவீதத்திற்கு 2018இல் குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், கைத்தொழில் துறையின் சுருக்கியானது 2017இன் 5.4 சதவீதத்திலிருந்து 2018இல் 5.5 சதவீதத்திற்கு சிறிதளவில் அதிகரித்திருந்தது.

## பணவீக்க எதிர்பார்ப்புக்கள்

**கம்பனித் துறையின் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் 2018இல் சரிவடைந்திருந்ததுடன் உண்மைப் பணவீக்கத்தின் அசைவுகளுடன் நெருக்கமான ஒத்த விதத்திலான அசைவினையும் கொண்டிருந்தது.** எவ்வாறாயினும், கம்பனித் துறையானது, நீண்டகாலத்தில் பணவீக்கத்திலான ஒரு அதிகரிப்பினை எதிர்பார்க்கின்ற

## சிறப்புக்குறிப்பு 5
## சொத்து விலைச் சுட்டெண்களைத் தொகுத்தல்: இலங்கையில் கூட்டுறுதித் தொடர்மாடிமனைகளின் சந்தைக்கான பிரயோகம்

பன்னாட்டு ரீதியாக ஒப்பிடத்தக்க சொத்துடமை விலைச் சுட்டெண்களைப் பயன்படுத்தி வீட்டு விலைப் பணவீக்கத்தினை அளவிடுவதற்கான தேவை, ஐக்கிய அமெரிக்காவில் சொத்துக் குமிழ்கள் வெடித்ததன் முக்கிய காரணமாக ஏற்பட்ட 2008இல் நிதியியல் நெருக்கடிகளைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார மந்தத்தின் பின்னர் வலுவாக உணரப்பட்டது. நெருக்கடிக்குப் பின்னரான புலனாய்வுகள் பொருளாதார நிலைமைகளை கொள்கை வகுப்போர் சிறந்த முறையில் மதிப்பிடுவதற்கு முட்டுக்கட்டையாக விளங்கும் குறிப்பிட்ட முக்கியமான பொருளாதார மற்றும் நிதியியல் தரவுகளின் இடைவெளியினை எடுத்துக்காட்டுவதுடன் தலையீடுகளையும் தேவைப்படுத்துகின்றது. வதிவிட மற்றும் வர்த்தகப் பிரிவுகள் இரண்டிற்குமான சொத்து விலைச் சுட்டெண்களைத் தொகுப்பது, இத்தகவல் இடைவெளியினை நிரப்புவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தினாலும் நிதியியல் உறுதிப்பாட்டுச் சபையினாலும் செய்யப்பட்ட முன்மொழிவுகளில்[1] ஒன்றாகும். இது ஜி20 நாடுகளினால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதுடன் சொத்துச் சுட்டெண்களைத் தொகுப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்குப் பல நாடுகளையும் தூண்டுவதாகவும் இருக்கிறது.

விலை உறுதிப்பாட்டின் தாக்கத்திற்கு மாறாக, இது தாங்கக்கூடிய தன்மையும் விலை மாற்றங்களும் வாடிக்கையாளர் செலவிடலின் மீது நேரடியான தாக்கத்தினைக் கொண்டிருக்கின்றமையினால் வீட்டின் விலைகளின் அசைவுகளைக் கண்காணிப்பதற்கு இது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மேலும், உண்மைச் சொத்துத் துறையுடன் தொடர்பான நடவடிக்கைகள் பொருளாதார வளர்ச்சிக்கு உயர்ந்தளவு பங்களிப்பினை வழங்குகின்றவிடத்து இத்துறையில் இடம்பெறும் கணிசமான மாற்றங்கள் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியின் தளம்பலுக்கு வழிவகுக்கிறது. உண்மைச் சொத்துப் பிரிவுக் கடன்கள் மற்றும் முற்பணங்களூடாக நிதியியல் நிறுவனங்களுக்கான இதன் வெளிப்படுத்துகைகளைக் கொண்டிருப்பதன் காரணமாக இது நிதியியல் சந்தைகளின் மீது அதிகளவு செல்வாக்கினைக் கொண்டிருக்கிறது. ஆகவே, உயர்தரத்துடன் கூடிய சரியான நேரத்தில் கிடைக்கும் சொத்து விலைச் சுட்டெண்கள் பொருளாதார வளர்ச்சிக்கான முன்னணிக் குறிகாட்டியாகவும் அதேபோன்று நிதியியல் உறுதிப்பாட்டிற்கான ஆற்றல் வாய்ந்த குறிகாட்டியாகவும் விளங்கி நாணயக் கொள்கை வடிவமைப்புச் செயன்முறையினை அவதானிப்பதற்கான இன்றியமையாத கூறொன்றாகவும் மாற்றியிருக்கின்றது. மேலும், சொத்து சந்தையிலிருந்தான உயர்ந்த எதிர்கால வருவாய்கள் மீதான எதிர்பார்ப்புக்கள் பொருளாதாரத்திற்கு வெளிநாட்டு முதலீடுகளைக் கவரக்கூடியதாக இருக்கும். எனவே, நம்பகமானதும் ஒப்பிடத்தக்கதுமான சொத்து விலைச் சுட்டெண்கள் மற்றைய முதலீட்டு தேர்வுக்கெதிராக ஒப்பிட்டுப் பார்ப்பதற்குச் சாத்தியமுள்ள முதலீட்டாளர்களுக்குப் பயன்மிக்கதாகவும் சொத்துச் சந்தைகளின் மீது ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் பன்னாட்டுச் சொத்துச் சந்தைகளுக்குப் பயன்படுத்துவதற்கும் உதவும்.

சொத்து விலைச் சுட்டெண்கள் கோட்பாட்டு ஒப்பீட்டு ரீதியில் அநேக நாடுகளுக்குப் புதியதொரு அம்சமாக இருக்கின்ற போதும், சில நாடுகள் இதனைக் கடந்த பல காலமாகத் திரட்டி வந்திருக்கின்றன. இருப்பினும் கூட, இரண்டு அமைப்புக்கள் ஒரே மாதிரியானவையாக இருக்காத பெருமளவிற்கு வேறுபட்ட தன்மைகளைக் கொண்ட சொத்துக்களாகவும் காலப்போக்கில் தரத்தில் மாற்றத்தினைக் கொண்டனவாகவும் (வசதிகளுக்கான மாற்றம் ஏற்கனவேயுள்ள பழையன போன்றவற்றிற்குச் செய்யப்படும் தொழில்நுட்பவியல் முன்னேற்றங்கள் போன்றவற்றின் மாற்றங்கள் காரணமாக) இருப்பதன் காரணமாக சொத்து விலைகளின் தற்காலிக தளம்பல்களைப் பெற்றுக் கொள்வதற்குச் சுட்டெண்ணொன்றினை உருவாக்குவது உண்மையில் சவால்மிக்கதாகவுள்ளது. மேலும், சொத்துக்கள் அடிக்கடி மாற்றல் செய்யப்படுவதில்லை என்பதனால், ஒரு சில நேரடியாக ஒப்பிடத்தக்க விற்பனைகள் குறிப்பிட்ட காலப்பகுதியில் குறிப்பிட்ட சந்தையில் கிடைக்கத்தக்கதாக இருக்கும். இக்காரணிகளின் காரணமாக, இது, சொத்து விலைச் சுட்டெண்களைத் தொகுப்பதில் தரமான சீராக்கங்களை ஆற்றுவது இன்றியமையாததாகும். இக்கரிசனைகள் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் கல்வியியலாளர்களையும் செயற்பாட்டாளர்களையும் உள்ளடக்கிய நிபுணர்கள் குழுவொன்று விலைச் சுட்டெண்கள் தொடர்பான பன்னாட்டுக் கைநூல்களுடன்[2] முன்வந்தது. இது நான்கு முக்கிய முறையியல்களான அடுக்கடுக்கான அல்லது கலப்பு சீராக்க முறை, ஹெடோனிப் பின்னோக்கிச் செல்லும், மீள்விற்பனை முறை மற்றும் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்ட முறை என்பனவற்றைக் கொண்டிருந்தது. இவை சொத்து விலைச் சுட்டெண்களை மதிப்பிடுவதில் தரத்தினைச் சீராக்குவதற்கு உலகளாவிய ரீதியில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவற்றிடையே தரவு மூலங்கள் தேவையான மிகச் சிறிய நுணுக்கமான மட்டங்களில் கிடைக்கத்தக்கதாக இருக்கிறது என்பதற்குட்பட்டு நிலையான தரமான சுட்டெண்ணினை நிருமாணிப்பதற்கு ஹெடோனிக் பின்னோக்கிச் செல்லும் முறைமை தற்பொழுது கிடைக்கத்தக்கதாகவுள்ள மிகப் பொருத்தமானதும் மிக நுணுக்கம் வாய்ந்ததுமென விதந்துரைக்கப்பட்டிருக்கிறது.

1 2009 ஒத்தோபரில், பன்னாட்டு நாணய நிதியமும் நிதியியல் உறுதிப்பாட்டுச் சபையும் அடையாளம் காணப்பட்ட தரவு இடைவெளிகளைக் கட்டுப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய 20 விதந்துரைப்புக்களை முன்மொழிகின்ற (ஜி20 தரவு இடைவெளி முன்னெடுப்புக்கள் - கட்டம் I மற்றும் கட்டம் II) அறிக்கையினை ஜி20 நிதி அமைச்சர்களுக்கும் மத்திய வங்கி ஆளுநர்களுக்கும் சமர்ப்பித்தது.

2 இது “வதிவிடச் சொத்து விலைச்சுட்டெண்கள் மீதான கைநூல்” இனை உள்ளடக்குகிறது. இது வீட்டு விலைச் சுட்டெண்களைத் திரட்டுவது மீதான நடைமுறை வழிகாட்டல்களை வழங்குவதன் மூலம் நாடுகளில் வதிவிட சொத்து விலைச் சுட்டெண்களை ஏற்படுத்துவதற்கு வசதியளிப்பதனை இலக்காகக் கொண்டு 2013இல் யூரோஸ்ராரினால் வெளியிடப்பட்டதுடன், வர்த்தகச் சொத்து விலைச் சுட்டெண்கள் தொடர்பில் தரவுகளின் மூலங்கள் மற்றும் முறையியல்களை உள்ளடக்கி “வர்த்தக ரீதியான சொத்து விலைக் குறிகாட்டிகள்: மூலங்கள், முறிகள் மற்றும் பிரச்சனைகள்” யூரோஸ்ராரனால் 2017இல் வெளியிடப்பட்டது.

4

### இலங்கைக்கான சொத்து விலைச் சுட்டெண்கள்

உண்மைச் சொத்துத் துறையில் அண்மையில் ஏற்பட்ட விரிவாக்கத்தினால் நன்மையடைந்த சொத்துக்கள் சந்தை, குறிப்பாக, கூட்டுறுதித் தொடர்மாடிமனைகள் தொடர்பிலான பின்னணியில், இலங்கையின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்கதொரு கூறாக விளங்கி வருகின்றது. இதன்படி, உலகளாவிய நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில், இலங்கை மத்திய வங்கி இப்புதிய அபிவிருத்தியினை உள்ளடக்குகின்ற விதத்தில் அதன் கண்காணிப்பினை விரிவுபடுத்திக் கொள்ளத் தீர்மானித்தது. இதன் விளைவாக, கூட்டுறுதித் தொடர்மாடி மனையின் மீது முக்கிய கவனத்தினைக் கொண்ட விதிவிட சொத்து விலைச் சுட்டெண்ணினைத் தொகுத்தல், 1998 இலிருந்து கிடைக்கத்தக்கதாகவுள்ள காணி விலைச் சுட்டெண்ணிற்குப்[3] புறம்பாக 2016இல் ஆரம்பிக்கப்பட்டது. தன்னியக்கப்படுத்தப்பட்ட தளங்கள் போதுமானதாக இல்லாமை, அவை தொடர்பான அலுவல்சார் பதிவேடுகளில் நுணுக்கமான மட்ட தரவுகள் கிடைக்காமலிருப்பது என்பனவற்றின் காரணமாக குறிப்பிட்ட காலப்பகுதியொன்றில் இடம்பெற்ற அலுவல்சார் விற்பனை கொடுக்கல்வாங்கல்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் காணப்படும் தடைகளைப் பரிசீலனையில் கொண்டு, மாற்றுத் தரவு மூலங்கள் கண்டறியப்பட்டன. இதற்கமைய, ஆரம்ப வதிவிட சொத்துப்பட்டியல் விலைச் சுட்டெண், விளம்பரப்படுத்தப்பட்ட விலைகளைப் பயன்படுத்தி மாதாந்த அடிப்படையில் தொகுக்கப்பட்டது. எனினும், இச்செயன்முறையினூடாக பெறப்பட்ட விலைகள் உண்மையான கொடுக்கல்வாங்கல் விலைகளை எடுத்துக்காட்டவில்லை. இவை வழமையாக விளம்பரப்படுத்தப்பட்ட விலைகளிலும் பார்க்கக் குறைவாகவே இருக்கின்றன. மேலும், விளம்பரப்படுத்தப்பட்ட அனைத்துச் சொத்துக்களும் குறிப்பிட்ட காலப்பகுதியில் விற்பனை செய்யப்படாமலும் போகலாம். மேலும், இம்முறையியலின் கீழ், ஒன்றில் விலை அசைவுகளுக்குப் பின்னாலுள்ள காரணங்களை அடையாளம் காணவோ அல்லது சந்தை தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளவோ முடியாமலும் போகலாம். இத்தகைய கரிசனைகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு கூட்டுறுதி தொடர்மாடிமனை சந்தை அளவீடொன்றினை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இது விலைச் சுட்டெண்ணினைத் திரட்டுவதற்கான உண்மையானச் சொத்து விற்பனைகள் மீதான தகவல்களை வழங்குவது மட்டுமன்றி சந்தை தொடர்பான மிக முழுமை வாய்ந்த பார்வையொன்றினையும் வழங்குகிறது.

[3] இலங்கை மத்திய வங்கி, அரச மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து சேகரிக்கப்படட வதிவிட, வர்த்தக மற்றும் கைத்தொழில் காணிகளுக்கான ஒரு பேர்ச் காணியின் விலைத் தரவுகளைப் பயன்படுத்தி அடிப்படை ஆண்டு - 1998 கொழும்பு மாவட்டத்திலுள்ள 5 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கி 1998 - 2008 காலப்பகுதியில் ஆண்டுதோறும் 2009 - 2007 வரையான காலப்பகுதியில் அரையாண்டுக்கொரு தடவையும் தொகுத்தது. உண்மைச் சொத்துத் துறையில் ஏற்பட்ட அண்மைய அபிவிருத்திகளின் காரணமாக காணி விலைகளை கண்காணிப்பதின் முக்கியத்துவம் அதிகரித்து வருவதுடன் காணி விலைச் சுட்டெண்ணின் புவியியல் பரப்பு உள்ளடக்கம் கொழும்பு மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் விரிவடைந்ததுடன் அதன் தளக் காலம் 2017 இன் முதலரைப் பகுதிக்குத் திருத்தப்பட்டது.

### கூட்டுறுதித் தொடர்மாடி மனை சந்தை அளவீடு

விற்பனை விலைகள் உட்பட, சந்தைத் தகவல்களை காலாண்டு அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் கூட்டுறுதித் தொடர்மாடிமனைச் சந்தை அளவீடு 2017இன் 3ஆம் காலாண்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. பதிலிறுப்பாளர்கள் இலங்கை கூட்டுறுதித் தொடர்மாடிமனை அபிவிருத்தியாளர் சங்கத்தின் உறுப்பினர்களையும் ஏனைய முக்கிய சந்தைத் தொழிற்பாட்டாளர்களையும் உள்ளடக்கிக் காணப்பட்டது. சந்தைத் தகவல்கள் அளவீட்டின் பங்கேற்பாளர்களிடையே விநியோகிக்கப்பட்ட வினாக்கொத்தினூடாகப் பெறப்பட்டன.

### கூட்டுறுதித் தொடர்மாடிமனை சொத்து விலைச் சுட்டெண்ணினைத் தொகுத்தல்

பல்வேறு வகைப்பட்ட கூட்டுறுதித் தொடர்மாடிமனை அலகுகளைப் பரிசீலனையில் கொள்கையில், கூட்டுறுதித் தொடர்மாடிமனை சொத்து விலைச் சுட்டெண் அதன் ஒன்றுசேர்ந்த பண்புகளின் காரணமாக வதிவிடச் சொத்தொன்றாக அங்கீகரிக்கப்படுவதனால் காலாண்டு சீராக்கங்களுக்காக இந்தக் கூட்டுறுதித் தொடர்மாடிமனை சொத்து விலைச் சுட்டெண்ணினைத் தொகுப்பதற்கு ஹெடோனிக் இறங்குமுக முறையினைப் பயன்படுத்துவதென தீர்மானிக்கப்பட்டது. இச்செயன்முறையின் இன்றியமையாத பகுதி விலைகளைத் தீர்மானத்தின் பண்புகளைத் தெரிவுசெய்தாகும். இது இறங்குமுகத்தில் விளக்க மாறிகளாகக் கருதப்படுகின்றது. அளவீட்டிற்கான பதிலிறுப்புக்கள் மற்றைய நாடுகளின் அனுபவங்கள் மற்றும் அளவிடும் தன்மை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு இறங்கு முகத்தில் பயன்படுத்தப்படுவதற்கென பின்வரும் எட்டு மாறிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு காலப்பகுதிக்குமான கூட்டுறுதித் தொடர்மாடிமனை விலைச் சுட்டெண் பின்னோக்கிச் செல்லும் முறையினூடாகப் பெறப்பட்ட பிரதிநிதித்துவ விலைகளைப் பயன்படுத்திப் பெறப்பட்டது. தற்பொழுது, சுட்டெண் அபிவிருத்தியின் பூர்வாங்கக் கட்டங்களில் இருப்பதனால் அவை உள்ளகப் பகுப்பாய்வு நோக்கங்களுக்கு மட்டுமே கருத்திற்கொள்ளப்படுவதுடன் பகிரங்க வெளிப்படுத்துகைகளுக்காக அவை கிடைக்கத்தக்கதாக இல்லை.

வரைபடம் சி.கு. 5.1
சுட்டெண் தொகுப்பில் பயன்படுத்தப்பட்ட மாறிகள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

4

### கூட்டுறுதித் தொடர்மாடிமனைச் சந்தை அளவீட்டினூடாகப் பெறப்பட்ட சந்தைத் தகவல்கள்

சொத்து அபிவிருத்தியாளர்களினால் அளவீட்டிற்கு வழங்கப்பட்ட தகவலின்படி, காலாண்டிற்கு அறிக்கையிடப்பட்ட விற்பனைக் கொடுக்கல்வாங்கல்களின் எண்ணிக்கை 2018இன் 1ஆம் காலாண்டு தவிர மற்றைய காலங்களில் உறுதியாகக் காணப்பட்டது[4]. விற்பனைக் கொடுக்கல்வாங்கல்களின் உள்ளமைப்பின் பகுப்பாய்வின்படி, ரூ.25 மில்லியனுக்குக் குறைவாக விலையிடப்பட்ட கூட்டுறுதித் தொடர்மாடிமனை வகையின் பங்கு அதிகரிப்பொன்றினைக் காட்டிய வேளையில் மற்றைய வகைகளின் பங்குகள் ஆய்விற்குரிய காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. அபிவிருத்தியின் வகை மற்றும் அமைவிடம் என்பனவற்றின் அடிப்படையில் அறிவிக்கப்பட்ட விலைகளின் கொடுக்கல்வாங்கல்கள் வகைப்படுத்தப்படும்[5] வேளையில் விற்பனைகள் இன்னமும் கொழும்பு மாவட்டத்திலேயே குவிந்து காணப்படுவதனையும் விற்கப்பட்ட அலகுகளில் பெரும்பாலானவை தனியான கூட்டுறுதித் தொடர்மாடிமனைச் செயற்றிட்டங்களைச் சேர்ந்தவையாக இருப்பதனையும் காணமுடிகிறது.


அட்டவணை சி.கு. 5.1
2018 4ஆம் காலாண்டிற்கான விற்பனைக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் சராசரி விலைகள்

| அபிவிருத்தி வகை | அறிவிக்கப்பட்ட விற்பனைக் கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை | அலகொன்றின் சராசரி விலை (ரூ. மில்லியன்) |
|---|---|---|
| கலப்பான அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் (அ) | 21 | 71.46 |
| கொழும்பு மாவட்டத்திலுள்ள தனியான கூட்டுறுதி தொடர்மாடிமனைச் செயற்றிட்டங்கள் | 199 | 25.24 |
| கொழும்பு மாவட்டம் தவிர்ந்த மேல் மாகாணத்திலுள்ள தனியான கூட்டுறுதி தொடர்மாடிமனைச் செயற்றிட்டங்கள் | 17 | 8.24 |
| ஏனைய மாகாணங்களிலுள்ள தனியான கூட்டுறுதி தொடர்மாடிமனைச் செயற்றிட்டங்கள் | 2 | 22.15 |

(அ) அறிவிக்கப்பட்ட அனைத்து கலப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களும் கொழும்பு மாவட்டத்திலேயே அமைந்துள்ளன.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் சி.கு. 5.2
விற்பனைக் கொடுக்கல்வாங்கல்களின் உள்ளமைப்பு (அ)





(அ) சதவீதங்கள் கூட்டுறுதி தொடர்மாடிமனை சந்தை அளவீட்டிற்கு அறிவிக்கப்பட்ட விற்பனை கொடுக்கல்வாங்கல்களின் எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

இறுதியாக நடத்தப்பட்ட அளவீட்டிற்குத் தகவல்களை வழங்கிய 26 கூட்டுறுதி தொடர்மாடிமனை அபிவிருத்தியாளர்களின்படி, 2018 இறுதியாக 7,659 நிறைவு செய்யப்பட்ட கூட்டுறுதித் தொடர்மாடி அலகுகள் கிடைக்கத்தக்கதாகவுள்ள வேளையில் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மற்றும் திட்டமிடப்பட்டுள்ள அலகுகளின் எண்ணிக்கை முறையே 9,564 ஆகவும் 6,332 ஆகவும் காணப்பட்டன. விற்பனைகள் பரிசீலனையில் கொள்கையில், நிறைவடைந்த கூட்டுறுதித் தொடர்மாடிமனைச் செயற்றிட்டங்களில் 95 சதவீதமான அலகுகள் விற்பனை செய்யப்பட்டிருப்பதனை அடையாளம் காணமுடிகிறது. மேலும், தற்பொழுது நடைபெற்றுவரும் அலகுகளில் 2018இன் இறுதியில் கலப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் 48 சதவீத அலகுகளும் தனியான கூட்டுறுதித் தொடர்மாடிமனைச் செயற்றிட்டங்களில் 53 சதவீத அலகுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

கூட்டுறுதித் தொடர்மாடிமனை அபிவிருத்தியின் நிதியிடல் அமைப்பினைப் பரிசீலனையில் கொள்கையில், அபிவிருத்தியாளர்களின் அபிப்பிராயத்தின்படி, நிதியங்கள் வங்கிக் கடன்களூடாகவும் விற்பனைக்கு முன்னரான

வரைபடம் சி.கு. 5.3
நிறைவடைந்த கூட்டுறுதி தொடர்மாடிமனைச் செயற்றிட்டங்களில் விற்பனை செய்யப்பட்ட அலகுகளின் சதவீதம் (அ)





(அ) தனியான கூட்டுறுதி தொடர்மாடிமனை வகைகளுக்குச் சொந்தமான அனைத்து அறிவிக்கப்பட்ட நிறைவு செய்யப்பட்ட கூட்டுறுதி தொடர்மாடிமனை அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் மற்றும் நிறைவு செய்யப்படாத அனைத்துக் கலப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களும் கிடைக்கத்தக்கதாகவுள்ளன.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

4 கூட்டுறுதித் தொடர்மாடிமனைகளின் விற்பனை மீது 15 சதவீத பெறுமதிசேர் வரி விதிக்கப்படுவதற்கு வரவு செலவுத்திட்டம் முன்மொழிந்தமையினால் 2018 ஏப்பிறல் 1 இலிருந்து விலை உயர்வதற்கு சாத்தியங்கள் காணப்பட்டமையின் காரணமாக 2018இன் முதற் காலாண்டுப் பகுதியில் கூட்டுறுதித் தொடர்மாடிமனைகளின் விற்பனை கொடுக்கல்வாங்கல்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்தது. இது பின்னர் ஒரு வருடத்திற்குப் பிற்போடப்பட்டது.

5 கூட்டுறுதித் தொடர்மாடிமனையினை வகைப்படுத்துவதற்கான தரப்படுத்தப்பட்ட/ஏற்றுக்கொள்ளப்படத்தக்க முறையொன்று இல்லாமையினால் அளவீட்டிற்கு அறிவிக்கப்பட்ட கூட்டுறுதித் தொடர்மாடிமனைகளின் செயற்றிட்டம் இரண்டு வகைகளாக வகைப்படுத்தப்பட்டன. அவையாவன கலப்பான அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் தனியான கூட்டுறுதித் தொடர்மாடிமனைச் செயற்றிட்டம். கலப்பான அபிவிருத்திச் செயற்றிட்டம் வதிவிட இடவசதிகளுக்குப் புறம்பாக சுற்றுலாவிடுதிகள், அலுவலக இடவசதி, பொழுதுபோக்கு வசதிகள் போன்றவற்றை உள்ளடக்கியிருந்த வேளையில் தனியொரு கூட்டுறுதித் தொடர்மாடிமனைச் செயற்றிட்டம் வதிவிட இடவசதியை மட்டும் உள்ளடக்கியிருந்தது.

வரைபடம் சி.கு. 5.4
நடைபெற்றுவரும் கூட்டுறுதி தொடர்மாடிமனைச் செயற்றிட்டங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட அலகுகளின் சதவீதம்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வைப்புக்கள் மற்றும் பங்குரிமை மூலதனம் என்பன மூலமாகவும் உருவாக்கப்படுகின்றன. மேலும் கூட்டுறுதித் தொடர்மாடிமனையின் வாங்குநர்களில் பெரும்பாலானவர்கள் வதியும் இலங்கையர்களாக இருப்பதனையும் அவர்களில் பெரும்பாலானவர்கள் முதலீடுகள் செய்வதிலும் பார்க்க வசதிப்பதற்காகவே அவற்றைக் கொள்வனவு செய்கிறார்கள் என்பதனையும் அவதானிக்க முடிகிறது. அதேவேளை, வாங்குநர்களில் பெரும்பான்மையாளர்கள் தமது சொந்த நிதியினைப் பயன்படுத்தியே கூட்டுறுதித் தொடர்மாடிமனையினைக் கொள்வனவு செய்திருக்கின்றனர்.

**முன்னோக்கிப் பயணித்தல்**

தரவுச் சேகரிப்பதில் தற்பொழுது நிலவுகின்ற தடைகளைப் பரிசீலனையில் கொண்டு, இலங்கை மத்திய வங்கி சுட்டெண்களின் பிரதிநிதித்துவத்தையும் ஏனைய சந்தைத் தகவல்களையும் மேம்படுத்திக் கொள்வதற்காக புவியியல் பரப்பின் உள்ளடக்கத்தினை விரிவாக்குவதற்கும் ஏற்கனவேயுள்ள தரவு மூலத்தின் பதிலிறுப்பு வீதத்தினை அதிகரிப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. பெரிய தரவுக் கோட்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கான வழிவகைகளை மேலும் கண்டறிவதும் மற்றைய தொடர்பான ஆர்வலர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதும் தற்பொழுது ஆயத்தநிலையிலிருப்பதுடன் மிக விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் இலங்கை மத்திய வங்கி குறிப்பிடத்தக்க இத்துறையில் பயிற்சிகளில் பங்கேற்றல், கூட்டங்கள், ஆய்வரங்குகள் மற்றும் ஆராய்ச்சி மாநாடுகள் போன்றவற்றினூடாகச் சொத்து விலைச் சுட்டெண்ணினை உருவாக்குவதில் எதிர்நோக்கப்படும் சவால்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் பன்னாட்டு இணைத்தரப்பினர்களின் அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்காகத் தொடர்ச்சியாகக் கலந்துரையாடல்களைப் பேணி வருகின்றது. தொகுக்கும் முறையியல்களை, சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட முன்னோக்கிய கொள்கை வகுப்புச் செயன்முறைகளை பலப்படுத்துவதற்காக முன்னணிப் பொருளாதாரக் குறிகாட்டியொன்றாக சொத்துச் சந்தையின் உணர்வினை அளப்பதனை உலகளாவிய நிபுணர்களின் ஆலோசனையுடன் மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வபிவிருத்திகள் மற்றும் தரவுத் தொடர்களின் போதுமான முதிர்ச்சி என்பனவற்றினைத் தொடர்ந்து இச்சுட்டெண் பொதுமக்களின் தகவலுக்காக வெளியிடப்படும்.

வகையில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நீண்டகால மற்றும் குறுகியகால பணவீக்க எதிர்பார்ப்புக்களுக்கிடையிலான இடைவெளி விரிவடைந்திருந்தமையினை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. நீண்டகாலப் பணவீக்க மட்டத்தின் மீதான அவர்களுடைய எதிர்பார்ப்புக்களுக்கு நலிவடைந்த உள்நாட்டு நாணயம், வழங்கல் பக்க இடையூறுகள் மற்றும் உறுதிப்பாடு மற்றும் வளர்ச்சியிலுள்ள குறைபாடுகள் என்பன பிரதான காரணங்கள் என பதிலிறுப்பாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். கம்பனித் துறையின் பணவீக்க எதிர்பார்ப்பானது நாணய மற்றும் இறைத்திரட்சிக் கொள்கை அளவிடைகளுக்கு நெருக்கமாகவும் சில நேரங்களில் ஒரு காலப்பின்னடைவுடனும் பதில் கூறியது. இயற்கையாகவே வீட்டலகுத் துறையின் பணவீக்க எதிர்பார்ப்பானது கம்பனித் துறையின் எதிர்பார்ப்புடன் ஒப்பிடுகையில் ஒரு உயர்வான மட்டத்தில் நிலைத்திருந்த போதிலும், 2018இல் அதுவும் ஒரு சரிவடைந்த போக்கினையே பின்பற்றியது.

## 4.3 கூலிகள்

**2018ஆம் ஆண்டுகாலப்பகுதியில், தளர்வடைந்த பணவீக்கத்துடன் கூலி வீதச் சுட்டெண்கள் பொருளாதாரத்தின் கூலி மீதான அழுத்தத்தினை ஒரு தாழ்வான பரிமாணத்தில் பேணும் வகையிலான சமிக்ஞைகளை குறித்துக்காட்டியது.** 2017 உடன் ஒப்பிடுகையில் 2018இல் பெயரளவு கூலிகளிலான சிறிதளவான அதிகரிப்பு மட்டுமே காணப்பட்டதினால் பொது மற்றும் முறைசார் தனியார் துறைகளில் உண்மைக் கூலி குறைப்பானது முதனிலைப்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால், பொது விலை மட்டம் மீது கூலிகளினால் உருவாகின்ற கேள்வி அழுத்தமானது ஆண்டு காலப்பகுதியில் ஒரு குறைவான நிலைமையில் காணப்பட்டது.

### பொதுத் துறைக் கூலிகள்

**பொதுத் துறை ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்திற்கு விசேட கொடுப்பனவுகள் மற்றும் இடைக்கால கொடுப்பனவுகளைச் சேர்த்துக்கொள்ளும் செயன்முறை தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகளாக 2018 இலும் தொடர்ந்தது.** இதன்படி, பொதுத் துறை கூலிவீதச் சுட்டெண்ணில் ஏற்பட்ட ஆண்டுச் சராசரி மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான பொதுத் துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் (2012=100) 2018இல் 0.1 சதவீதத்தினால் சிறிதளவில் அதிகரித்தது. ஆண்டு காலப்பகுதியில் நிலவிய தாழ்வான பணவீக்கத்தின் விளைவாக பொதுத் துறையின் உண்மைக் கூலிகள் 2017இன்

4

7.2 சதவீதமான உண்மைக் கூலி குறைப்புடன் ஒப்பிடுகையில் 2018இல் 2.0 சதவீதத்தினால் சரிவடைந்தது. எவ்வாறாயினும், பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 அடிப்படையில் பொதுத் துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலியின் அதிகரிப்பானது கடந்த மூன்று ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட உயர்வினை விட அடுத்த இரண்டு ஆண்டுகளில் உயர்வாக இருக்குமென வெளிப்படுத்துகின்றது. இதற்குமேலாக, பொதுத் துறையிலான சம்பள ஒழுங்கின்மையை நிவர்த்தி செய்வதற்காக 2018 ஓகத்தில் பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு விசேட சம்பள ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

## தனியார் துறைக் கூலிகள்

**கூலி நிர்ணய சபையால்[3] நிருவகிக்கப்படும் ஊழியர்களின் குறைந்தபட்சக் கூலி வீதச்சுட்டெண்ணில் (1978 திசெம்பர்=100) ஏற்படும் ஆண்டுச் சராசரி மாற்றத்தின் நியதிகளில் அளவிடப்படுகின்ற முறைசார் தனியார் துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 2018இல் சிறிதளவான 0.6 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.** இதற்கு 2018 ஓகத்தில் அச்சிடல், புடவைகள், டயர் மற்றும் ரியூப் தயாரிப்புக்கள் மற்றும் ஆடைத் தயாரிப்புக்களின் வர்த்தகம் என்பவற்றின் குறைந்தளவு கூலிகளின் அதிகரிப்புக்களே பிரதான காரணங்களாகும். முறைசார் தனியார் துறையின் ஊழியர்களின் உண்மைக் கூலிகளானது 2017இல் பதிவுசெய்யப்பட்ட 5.9 சதவீதமான சரிவுடன் ஒப்பிடுகையில் 2018 காலப்பகுதியில் 3.5 சதவீதத்திற்கு சரிவடைந்தது. தற்போதுள்ள குறைந்தளவு கூலியான மாதத்திற்கு ரூ.10,000 இனை அதிகரிப்பதற்கு தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சானது 2018இல் கலந்துரையாடல்களை ஆரம்பித்திருந்தது. இதேவேளையில், பெருந்தோட்டத் துறையைச் சார்ந்த ஊழியர்கள் குறைந்தளவு தினசரிக் கூலி ரூ.1,000 இனை வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்களை ஆரம்பித்திருந்தனர். எவ்வாறாயினும், 2019ஆம் ஆண்டு ஆரம்பத்தில் பெருந்தோட்டத் துறை ஊழியர்களின் அடிப்படைத் தினசரிக் கூலி ரூ.500 இலிருந்து ரூ.700 இற்கு அதிகரிக்கப்பட்டது.

**முறைசாராத் துறையின் கூலிகள் தொழிற்சந்தையில் காணப்படுகின்ற கேள்வி மற்றும் நிலைமைகளால் பெரும்பாலும் நிர்ணயிக்கப்படுகின்ற காரணத்தினால் 2018இல் முறைசாரா தனியார் துறையின் பெயரளவு மற்றும் உண்மைக் கூலிகள் இரண்டிலும் ஒரு வளர்ச்சி அவதானிக்கப்பட்டது.** அதன்படி, முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண்ணில் (2012=100) ஏற்பட்ட ஆண்டுச் சராசரி மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முறைசாரா தனியார் துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 9.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2018இல் 13.2 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. 2018இல் வேளாண்மை மற்றும் பணிகள் துணைத் துறையின் இரண்டினதும் பெயரளவுக் கூலிகள் 14.3 சதவீதத்தினால் அதிகரித்திருந்த வேளையில் கைத்தொழில்

3 இலங்கை மத்திய வங்கியினால் குறைந்தபட்ச கூலிகளைக் கணிப்பதற்காக பெயரளவுச் சுட்டெண்களையும் உண்மைச் சுட்டெண்களையும் தொகுப்பதற்கு 21 கூலிநிர்ணய சபைகளின் குறைந்தபட்சக் கூலிகள் பரிசீலனையில் கொள்ளப்பட்டன.

4


அட்டவணை 4.5
**கூலிவீதச் சுட்டெண்கள்**

| தொழில்நிலை வகை | சுட்டெண் | | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பெயரளவு | | உண்மையான | | பெயரளவு | | உண்மையான | |
| | 2017 | 2018 | 2017 | 2018 | 2017 | 2018 | 2017 | 2018 |
| 1. அரச ஊழியர்கள் | | | | | | | | |
| **அனைத்து அரச ஊழியர்கள் (2012=100)** | **160.8** | **161.0** | **130.9(அ)** | **128.3(அ)** | **0.0** | **0.1** | **-7.2** | **-2.0** |
| முதல் நிலை அலுவலர்கள் | 170.4 | 170.4 | 138.7(அ) | 135.7(அ) | 0.0 | 0.0 | -7.2 | -2.2 |
| இரண்டாம் நிலை அலுவலர்கள் | 161.6 | 161.6 | 131.5(அ) | 128.8(அ) | 0.0 | 0.0 | -7.2 | -2.1 |
| மூன்றாம் நிலை அலுவலர்கள் | 155.5 | 155.9 | 126.6(அ) | 124.2(அ) | 0.0 | 0.3 | -7.2 | -1.9 |
| மூத்த நிலை அலுவலர்கள் | 141.4 | 144.9 | 115.0(அ) | 115.5(அ) | 0.0 | 2.5 | -7.2 | 0.4 |
| 2. கூலி நிர்ணய சபை வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | | | | | | | | |
| **அனைத்து கூலி நிர்ணய சபை (1978 திசெம்பர் =100)** | **4,128.6** | **4,155.2** | **97.4(ஆ)** | **94.0(ஆ)** | **0.0** | **0.6** | **-5.9** | **-3.5** |
| வேளாண்மைத் தொழிலாளர்கள் | 4,736.7 | 4,748.8 | 111.8(ஆ) | 107.5(ஆ) | 0.0 | 0.3 | -5.9 | -3.9 |
| கைத்தொழில் மற்றும் வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | 3,459.1 | 3,545.3 | 81.6(ஆ) | 80.2(ஆ) | 0.0 | 2.5 | -5.9 | -1.7 |
| பணிகளிலுள்ள தொழிலாளர்கள் | 2,313.2 | 2,331.2 | 54.6(ஆ) | 52.7(ஆ) | 0.0 | 0.8 | -5.9 | -3.4 |
| 3. முறைசாரா தனியார்துறை ஊழியர்கள் | | | | | | | | |
| **அனைத்து முறைசாரா தனியார்துறை (2012=100)** | **149.7** | **169.5** | **121.8(அ)** | **135.0(அ)** | **9.5** | **13.2** | **1.7** | **10.8** |
| வேளாண்மை | 150.9 | 172.6 | 122.8(அ) | 137.4(அ) | 10.3 | 14.3 | 2.3 | 11.9 |
| கைத்தொழில் | 155.0 | 173.0 | 126.1(அ) | 137.8(அ) | 10.2 | 11.6 | 2.3 | 9.2 |
| பணிகள் | 144.1 | 164.8 | 117.2(அ) | 131.2(அ) | 8.5 | 14.3 | 0.7 | 12.0 |

(அ) தேசிய நுகர்வோர் விலைசுட்டெண்ணை (2013=100) அடிப்படையாகக் கொண்டது
(ஆ) கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை (2006/07=100) அடிப்படையாகக் கொண்டது

*மூலங்கள்:* தொழிலாளர் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 4.8
உண்மைக் கூலிவீத சுட்டெண்களின் வருடாந்த சராசரி மாற்றம்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி
தொழில் திணைக்களம்

துணைத் துறையின் பெயரளவுக் கூலிகள் 11.6 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. ஆண்டு காலப்பகுதியில், பெயரளவுக் கூலிகளின் அதிகரிப்பு மற்றும் அவதானிக்கப்பட்ட தாழ்வான பணவீக்க மட்டங்கள் காரணமாக முறைசாரா தனியார் துறையின் ஊழியர்களின் உண்மைக் கூலியானது 2018இல் 10.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தது.

## 4.4 குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை

### குடித்தொகை

**2018இல் நடுவாண்டுக் குடித்தொகை 1.1 சதவீத ஆண்டுக்கான வளர்ச்சியுடன் 21.7 மில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன் வளர்ச்சி வீதமானது கடந்த இரண்டு ஆண்டுகாலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட வளர்ச்சி வீதத்துடன் மாற்றமின்றிக் காணப்பட்டது. குடித்தொகை வளர்ச்சி வீதத்துடன் சார்பாக, குடித்தொகை அடர்த்தியானது[4] 2017இல் பதிவுசெய்யப்பட்ட ஒரு சதுர கிலோமீற்றருக்கான நபர்களின் எண்ணிக்கையானது 342 இலிருந்து 2018இல் ஒரு சதுர கிலோமீற்றருக்கான நபர்களின் எண்ணிக்கையான 346 இற்கு அதிகரித்தது.** இலங்கை மத்திய வங்கியினால் தொகுக்கப்படும் மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கமைவாக மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு முதன்மைப் பங்களிப்பாளராக விளங்கும் மேல் மாகாணம் மொத்த நடுவாண்டுக் குடித்தொகையில் உயர்வான பங்கான 28.3 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் மத்திய, தென் மற்றும் வடமேல் மாகாணங்கள் என்பன முறையே 12.7 சதவீதம், 12.2 சதவீதம் மற்றும் 11.7 சதவீதம் என்பவற்றிற்கு 2018இல் வகைகூறின. நடுவாண்டுக் குடித்தொகையில் குறைந்தளவிலான 5.2 சதவீதமான பங்கினைத் தொடர்ந்தும் வட மாகாணம் வகை கூறுகின்றது. இலங்கையில் நடைபெறுகின்ற பாரியளவிலான அபிவிருத்திச் செயற்றிட்டங்களைச் சார்ந்துள்ள தொழிற்படை குடிவரவினால் ஏற்படக்கூடிய எதிர்பார்க்கப்படுகின்ற சாதகமான தேறிய குடியேற்றத்தினால் உந்தப்பட்டு வருகின்ற ஆண்டுகளில் குடித்தொகையானது மேலும் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

4 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பிற்கான நபர்களின் எண்ணிக்கை

நடுவாண்டுக் குடித்தொகையில் 12.4 சதவீத பங்கினை[5] **வகைகூறுகின்ற 60 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுப் பரம்பலின் குடித்தொகையானது ஏனைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் உயர்வாகக் காணப்படுகின்றது.** இது அபிவிருத்தியடைந்துவரும் நாடு என்ற வகையில் ஒப்பீட்டளவில் அதிகமாகவுள்ளது. கடந்த பல ஆண்டுகளாக சாதகமான இறப்பு வீதங்கள் மற்றும் சர்வதேச ரீதியான தொழிலாளர் இடம்பெயர்வுகளின் அசைவுகள் என்பன இந்த வயதுக் கட்டமைப்பின் அமைப்பு ரீதியான மாற்றத்திற்கு காரணிகளாக அமைந்தன. தாழ்ந்தளவிலான உற்பத்தித் திறன், தாழ்ந்தளவிலான தொழிற்படை பங்கேற்பு வீதம், தாழ்ந்தளவிலான

5 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2012இன் குடித்தொகை மற்றும் வீடமைப்பு கணக்கெடுப்பின் அடிப்படையிலானது.

அட்டவணை 4.6
மாவட்ட அடிப்படையில் குடித்தொகை மற்றும் அடர்த்தி (அ) (ஆ)


| மாவட்டம் | 2017 | | 2018 | |
|---|---|---|---|---|
| | குடித்தொகை '000 நபர்கள் | அடர்த்தி | குடித்தொகை '000 நபர்கள் | அடர்த்தி |
| கொழும்பு | 2,419 | 3,578 | 2,439 | 3,608 |
| கம்பஹா | 2,391 | 1,783 | 2,409 | 1,796 |
| களுத்துறை | 1,271 | 806 | 1,281 | 813 |
| கண்டி | 1,452 | 757 | 1,468 | 766 |
| மாத்தளை | 514 | 263 | 519 | 266 |
| நுவரெலியா | 756 | 443 | 763 | 447 |
| காலி | 1,113 | 688 | 1,124 | 695 |
| மாத்தறை | 851 | 670 | 858 | 676 |
| அம்பாந்தோட்டை | 647 | 259 | 655 | 262 |
| யாழ்ப்பாணம் | 608 | 654 | 613 | 660 |
| மன்னார் | 107 | 57 | 109 | 58 |
| வவுனியா | 184 | 99 | 187 | 100 |
| முல்லைத்தீவு | 96 | 40 | 96 | 40 |
| கிளிநொச்சி | 124 | 103 | 126 | 105 |
| மட்டக்களப்பு | 560 | 215 | 570 | 218 |
| அம்பாறை | 705 | 167 | 719 | 170 |
| திருகோணமலை | 412 | 163 | 421 | 166 |
| குருநாகல் | 1,694 | 366 | 1,711 | 370 |
| புத்தளம் | 814 | 282 | 825 | 286 |
| அநுராதபுரம் | 918 | 138 | 930 | 140 |
| பொலனறுவை | 431 | 140 | 436 | 142 |
| பதுளை | 864 | 306 | 873 | 309 |
| மொனராகல | 485 | 88 | 491 | 89 |
| இரத்தினபுரி | 1,151 | 356 | 1,163 | 359 |
| கேகாலை | 877 | 520 | 884 | 525 |
| **மொத்தம்** | **21,444** | **342** | **21,670** | **346** |

(அ) தற்காலிகமானது
(ஆ) நடு ஆண்டு குடித்தொகையானது 2012 ஆம் ஆண்டின் குடித்தொகை மதிப்பீடு மற்றும் வீடமைப்பு மதிப்பீடுகளின் இறுதி அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டது.

*மூலம்:* பதிவாளர் நாயகத் திணைக்களம்

4

வரைபடம் 4.9
நடுவாண்டு சனத்தொகை 2018 (அ)




(அ) தற்காலிகமானது *மூலம்:* பதிவாளர் நாயகத் திணைக்களம்

4

நுகர்வு வீதங்கள், தாழ்ந்தளவிலான சேமிப்புக்கள், வயது முதிர்ந்தோரின் தங்கியிருப்பு விகித அதிகரிப்பு, சமூக நலன்புரிகள் மற்றும் நலப்பாதுகாப்பு அடிப்படையிலான பொதுச் செலவினத்தின் அதிகரிப்பு எனும் வகைகளில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு வயது முதிர்ந்த குடித்தொகையானது மேலும் சவால்மிக்க நிகழ்வொன்றாக மாறிவருகின்றது. ஆகையால், பொருளாதார நடவடிக்கைகளில் வயது முதிர்ந்த குடித்தொகையின் செயற்பாட்டினை சேர்த்துக்கொள்வதற்காக படிப்படியான ஓய்வு நிலை, ஓய்வுபெறும் வயதினை அதிகரித்தல் மற்றும் தேர்ச்சியை அதிகரித்தல் சார்பான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு கவனத்திற்கொள்ள வேண்டும்.

## தொழிற்படை

**அண்மைய கடந்தகாலத்தில் அவதானிக்கப்பட்ட போக்கிற்கு மாறாக, 15 வயது மற்றும் அதற்குமேலான பொருளாதார ரீதியில் செயற்பாட்டிலுள்ள குடித்தொகையினர்[6] என வரைவிலக்கணப்படுத்தப்படும் தொழிற்படை 2017இல் பதிவுசெய்யப்பட்ட 8.567 மில்லியனிலிருந்து 2018இன் அதேகாலப்பகுதியில் 2.1 சதவீதத்தினால் சரிவடைந்து 8.388 மில்லியனைப் பதிவுசெய்தது.** முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் 6.7 சதவீதத்திலான பெண்கள் தொழிற்படையின் சரிவானது ஒட்டுமொத்த தொழிற்படையின் சரிவிற்குக் காரணமாக அமைந்தது. கிராமியத் துறையில் பெண்கள் தொழிற்படையின் சரிவானது கணிசமானளவு காணப்பட்டதுடன் இதில் 78.7 சதவீத பெண்கள் தொழிற்படை கவனத்திற்கொள்ளப்பட்டது. தொழிற்படையில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் தொழிலிலுள்ள குடித்தொகையானது 2017இல் பதிவுசெய்யப்பட்ட 8.208 மில்லியனிலிருந்து 2018இல் 2.4 சதவீதத்தினால் சரிவடைந்து 8.015 மில்லியனை பதிவுசெய்த வேளையில் தொழிலற்ற குடித்தொகையானது 2018இல் 3.9 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இதேவேளையில், 2018ஆம் ஆண்டுகாலப்பகுதியில் பொருளாதார செயலாற்றலின்மையில் ஒரு முக்கியமான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதுடன் கிராமியத் துறையிலான 8.4 சதவீதப் பொருளாதார ரீதியில் செயற்பாடற்ற குடித்தொகையின் அதிகரிப்பினால் பிரதானமாக ஏற்பட்டது. பொருளாதார ரீதியில் செயற்பாட்டிலுள்ள மற்றும் செயற்பாடற்ற நபர்கள் இரண்டையும் உள்ளடக்குகின்ற வீட்டலகுக் குடித்தொகையானது 2018இல் 2.2 சதவீதத்தினால் விரிவாக்கம் அடைந்திருந்ததுடன் தொழிற்படைப் பங்கேற்பு வீதமானது[7] 2017இல் பதிவுசெய்யப்பட்ட 54.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 51.8 சதவீதத்திற்குக் குறைவடைந்திருந்தது.

**2018ஆம் ஆண்டுகாலப்பகுதியில் தொழிற்படை பங்கேற்பில் பால் ரீதியான இடைவெளியானது விரிவடைந்திருந்ததுடன், பெண்கள் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 36.6 சதவீதத்திலிருந்து 33.6 சதவீதத்திற்கு குறைவடைந்திருந்தது.** கல்வி மற்றும் நிபுணத்துவத்தினால் தேர்ச்சியடைந்த பெண்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்த போதிலும் தொழிற்படையில் பெண்களின் பங்கேற்பானது இலங்கையில் இன்னும் பின்தங்கிய நிலையே காணப்படுகிறது. அதன்படி, தேசிய பொருளாதாரத்திற்கு, வேலைசெய்யக்கூடிய வயதுப் பரம்பலிலுள்ள பெண்களின் கணிசமான அளவு பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச்

6 பொருளாதார ரீதியில் செயற்பாட்டிலுள்ள குடித்தொகையானது தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடத்தப்படும் காலாண்டு தொழிற்படை அளவீடு இடம்பெற்ற தொடர்பான காலப்பகுதியில் தொழிலுள்ளோர் மற்றும் தொழிலற்றோரை உள்ளடக்குகிறது.

7 15 வயது மற்றும் அற்கு மேற்பட்ட வீட்டலகு குடித்தொகையினரின் தொழிற்படையின் விகிதத்தினை தொழிற்படை பங்கேற்பு வீதம் குறித்துக்காட்டுகின்றது.


அட்டவணை 4.7
குடும்ப அலகுகளின் குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழிற்படை பங்கேற்பு (அ) (ஆ)

| விடயம் | 2017 | 2018(இ) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | கா1 | கா2 | கா3 | கா4 | ஆண்டு |
| **குடும்ப அலகுகளின் குடித்தொகை '000 ஆட்கள்** | **15,844** | **16,034** | **16,348** | **16,177** | **16,226** | **16,196** |
| **தொழிற்படை '000 ஆட்கள்** | **8,567** | **8,333** | **8,352** | **8,388** | **8,478** | **8,388** |
| தொழிலுள்ளோர் | 8,208 | 7,961 | 7,970 | 8,041 | 8,088 | 8,015 |
| தொழிலற்றோர் | 359 | 372 | 382 | 347 | 389 | 373 |
| **தொழிற்படை பங்கேற்பு வீதம் (ஈ)** | **54.1** | **52.0** | **51.1** | **51.8** | **52.2** | **51.8** |
| ஆண் | 74.5 | 73.4 | 72.5 | 72.7 | 73.2 | 73.0 |
| பெண் | 36.6 | 33.5 | 32.5 | 34.0 | 34.3 | 33.6 |

(அ) 15 வயதும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகை
(ஆ) 2016 யூலையில் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் 2011இல் இருந்தவாறான மீள்நிறையிடப்பட்ட மற்றும் மீள்திருத்தப்பட்ட தொழிற்படை தரவுகளை வெளியிட்டது
(இ) தற்காலிகமானது.
(ஈ) குடும்ப அலகுகளின் குடித்தொகையில் தொழிற்படையின் சதவீதம்

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரத்திணைக்களம்

வரைபடம் 4.10
ஊழியச் சந்தை நிழற்படம் - 2018 (அ)





(அ) தற்காலிகமானது

*மூலம்:* தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

செய்யவில்லை. சந்தைப்படுத்தக்கூடிய திறன்களிலுள்ள இடையூறுகள், தொழிலாளர் சந்தையின் குறுகிய தேர்வுகள், தொழில்நிலை வாய்ப்புக்கள், கூலிகள் மற்றும் பதவி உயர்வுகளிலான பால் ரீதியான பாகுபாடுகள், தொழில்புரியும் இடம் மற்றும் பொதுப் போக்குவரத்தில் துன்புறுத்தல்கள், சாதகமற்ற சமூக விதிமுறைகள், திருப்தியளிக்கக்கூடிய

வரைபடம் 4.11
தொழிற்படை மற்றும் தொழிலின்மையின் போக்குகள் (2013 - 2018)





*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

பிள்ளைகள் பராமரிப்பு வசதிகளின் கிடைப்பனவின்மை மற்றும் இலங்கை பெண்களினால் நிறைவேற்றப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்ற பல்வேறுவிதமான சமூக பங்குகள் மற்றும் கடமைகள் போன்ற பல்வேறு காரணிகள் தொழிற்படையில் பெண்கள் பங்கேற்பினை தாமதப்படுத்துகின்றன. ஆகையால், பால் சமத்துவம் மற்றும் பாலியல் துன்புறுத்தலுக்கான பூச்சிய சகிப்புத்தன்மை உள்ளடக்கிய பாகுபாடின்மை, நெகிழ்வான வேலை நேரங்கள் மற்றும் வீட்டிலிருந்தான வேலை மற்றும் கட்டுப்படியாகக்கூடிய மற்றும் உயர்தரத்திலான குழந்தை மற்றும் முதியோர் பாரமரிப்பு மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து போன்ற ஆதரவளிக்கக்கூடிய வேலை ஒழுங்கமைப்புக்கள் மீதான தேசிய மட்டத்திலான கொள்கைகள் பொருளாதாரத்தில் சுறுசுறுப்பாக பெண்கள் இயங்குவதற்கான சாதகமான சூழ்நிலையினை உருவாக்குவதற்கு மிகவும் முக்கியமானதாக அமைகின்றது. இந்த முன்னெடுப்புக்கள் ஒட்டுமொத்த தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தினை அதிகரிப்பதற்கு பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தி, விளைவாக நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கும்.

## தொழில்நிலை


தொழிலிலுள்ள குடித்தொகையானது 2017இல் பதிவுசெய்யப்பட்ட 8.208 மில்லியனிலிருந்து 2018இல் 8.015 மில்லியனைப் பதிவுசெய்து 2.4 சதவீதத்தினால் குறைவடைந்தது.

வரைபடம் 4.12
தொழில்நிலையின் நிலை 2018




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

வரைபடம் 4.13
பால் அடிப்படையில் தொழில்நிலை நிலையின் பகிர்ந்தளிப்பு - 2017




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

2018இல் தொழிலிலுள்ள குடித்தொகையின் பெரும்பகுதி பணிகள் துறையில் வகைகூறியதுடன் இது மொத்த தொழில்நிலையில் 46.6 சதவீதத்திற்குத் தொடர்ந்தும் வகை கூறியது. கைத்தொழில் துறையானது 2018இல் மொத்த தொழில்நிலையின் 27.9 சதவீதப் பங்கிற்கு பங்களித்திருந்ததுடன், வேளாண்மைத் துறையானது, முன்னைய ஆண்டின் 26.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 25.5 சதவீதத்திற்கு பங்களித்தது. அதன்படி, வேளாண்மைத் துறையில் தொழிலிலுள்ள குடித்தொகையின் பங்கானது தொடர்ச்சியாக 2018 இலும் சரிவடைந்ததுடன், இது தொழில்நிலையில் கட்டமைப்பு மாற்றத்தினையும் சமிக்ஞைப்படுத்துகின்றது.



தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் அளவிடப்படுகின்ற காலாண்டு அடிப்படையிலான தொழிற்படை அளவீட்டின் அடிப்படையில், இலங்கையில் தொழில்நிலை உருவாக்குகின்ற பிரதானமான துறையாக தனிநபர் துறையே

அட்டவணை 4.8
பொருளாதார செயற்பாடுகளின்படி தொழில்நிலை (அ) (ஆ) (இ)

| துறை | '000 நபர்கள் | | | | | | மொத்த தொழில் நிலையில் சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 (ஈ) | | | | | 2017 | 2018 (ஈ) |
| | | கா1 | கா2 | கா3 | கா4 | ஆண்டு | | |
| **வேளாண்மை** | **2,140** | **2,139** | **1,928** | **2,035** | **2,073** | **2,044** | **26.1** | **25.5** |
| **கைத்தொழில்** | **2,331** | **2,224** | **2,190** | **2,306** | **2,237** | **2,239** | **28.4** | **27.9** |
| கல்லுடைத்தலும் சுரங்கம் அகழ்தலும் | 63 | 55 | 78 | 63 | 53 | 62 | 0.8 | 0.8 |
| தயாரிப்பு | 1,581 | 1,472 | 1,363 | 1,529 | 1,492 | 1,464 | 19.3 | 18.3 |
| கட்டடவாக்கம், மின்வலு, வாயு, நீராவி, குளிரூட்டப்பட்ட வழங்கல், நீர் வழங்கல், கழிவு நீர் அமைப்பு, கழிவு முகாமைத்துவம் மற்றும் சூழல் மாசடைதலை தவிர்க்கும் நடவடிக்கைகள் | 688 | 698 | 748 | 715 | 692 | 713 | 8.4 | 8.9 |
| **பணிகள்** | **3,737** | **3,598** | **3,852** | **3,700** | **3,779** | **3,732** | **45.5** | **46.6** |
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், உந்து ஊர்திகள் மற்றும் உந்து ஈருளிகளில் பழுதுபார்த்தல் | 1,160 | 1,138 | 1,131 | 1,145 | 1,152 | 1,141 | 14.1 | 14.2 |
| போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் | 513 | 493 | 528 | 488 | 499 | 502 | 6.3 | 6.3 |
| வதிவிடம் மற்றும் உணவுச் சேவை நடவடிக்கைகள் | 210 | 216 | 233 | 253 | 250 | 238 | 2.6 | 3.0 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் | 70 | 52 | 65 | 60 | 43 | 55 | 0.9 | 0.7 |
| நிதி மற்றும் காப்புறுதி நடவடிக்கைகள் | 160 | 186 | 192 | 162 | 153 | 173 | 1.9 | 2.2 |
| தொழில்சார், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகள் | 70 | 77 | 83 | 88 | 97 | 86 | 0.8 | 1.1 |
| நிர்வாகம் மற்றும் துணைச்சேவை நடவடிக்கைகள் | 152 | 134 | 181 | 169 | 184 | 167 | 1.9 | 2.1 |
| பொது நிர்வாகம் மற்றும் கட்டாய சமூக பாதுகாப்பு சமூக பாதுகாப்பு | 527 | 457 | 444 | 383 | 454 | 434 | 6.4 | 5.4 |
| கல்வி | 377 | 392 | 466 | 408 | 434 | 425 | 4.6 | 5.3 |
| மனிதநல மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 149 | 141 | 151 | 150 | 129 | 143 | 1.8 | 1.8 |
| ஏனையவை (உ) | 348 | 313 | 376 | 395 | 382 | 366 | 4.2 | 4.6 |
| **மொத்த தொழில்நிலை** | **8,208** | **7,961** | **7,970** | **8,041** | **8,088** | **8,015** | **100.0** | **100.0** |
| தொழிற்படையின் சதவீதமாக | **95.8** | **95.5** | **95.4** | **95.9** | **95.4** | **95.6** | | |

(அ) பன்னாட்டு தர கைத்தொழில் வகைப்படுத்தல் - திருத்தம் 4 இனை அடிப்படையாகக் கொண்டது
(ஆ) 15 வயதும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகை
(இ) 2016 யூலையில் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம் 2011 இலிருந்தவாறான மீள்நிறையிடப்பட்ட மற்றும் திருத்தியமைக்கப்பட்ட தொழிற்படை தரவுகளை வெளியிட்டது.
(ஈ) தற்காலிகமானது.
(உ) தொழில் வழங்குநர்களாக குடியிருப்புகளின் நடவடிக்கைகள், மெய் ஆதனங்கள், கலை, கேளிக்கை மற்றும் பொழுதுபோக்கு, ஆட்சிப் பகுதிக்கு அப்பால் உள்ள நிறுவனங்கள் மற்றும் நடவடிக்கைகள் உள்ளடங்கலாக

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 4.9
அரசதுறை தொழில்நிலை

| துறை | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) | சதவீத மாற்றம் 2017/2016 (அ) | சதவீத மாற்றம் 2018/2017 (ஆ) |
|---|---|---|---|---|---|
| அரசு (இ) | 1,146,995 | 1,152,211 | 1,161,891 | 0.5 | 0.8 |
| பகுதியளவான அரசு (ஈ) | 242,772 | 244,514 | 248,707 | 0.7 | 1.7 |
| **அரச துறை** | **1,389,767** | **1,396,725** | **1,410,598** | **0.5** | **1.0** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) மத்திய அரசாங்கம், உள்ளூராட்சி மன்றம், மற்றும் மாகாண சபைகள்
(ஈ) அரசகூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள் மற்றும் அரச அதிகார சபைகள்

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**விளங்கியதுடன் 2018இல் மொத்த தொழில்நிலையில் 43.4 சதவீதமான உயர்வான பங்கினையும் தனியார் துறை வகைகூறுகின்றது.** தொழில்தருநர்கள், சொந்தமாக தொழில் வழங்குவோர் மற்றும் பங்களிக்கும் குடும்ப தொழிலாளர் போன்ற மூன்று குழுவினை உள்ளடக்குகின்ற சுயதொழில்புரிவோர் வகையும் கரிசனைக்குரிய காலப்பகுதியில் மொத்த தொழில்நிலையில் 42.2 சதவீத உயர்வான ஒரு பங்கினை வகைகூறியது. இதன்படி, இவற்றுள் சொந்தமாக தொழில்புரிவோர், பங்களிக்கும் குடும்ப தொழிலாளர்கள் மற்றும் தொழில்தருநர்கள் வகைகள் முறையே மொத்த தொழில்நிலையில் 32.3 சதவீதம், 7.2 சதவீதம் மற்றும் 2.8 சதவீதப் பங்குகளை வகைகூறின. இதேவேளையில், 2018இல் மொத்த தொழில்நிலையில் 14.5 சதவீதப் பங்கினை பொதுத்துறை வகைகூறியது.


**இலங்கை மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட பொதுத் துறை தொழில்நிலை அளவீட்டின்படி, மொத்தப் பொதுத் துறை தொழில்நிலை 2017இன் 1.397 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இன் இறுதியில் 1.411 மில்லியனாகக் காணப்பட்டது.** இது அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள், மாகாண சபைகள் மற்றும் அரசுசார் நிறுவனங்களிலுள்ள ஊழியர்களை உள்ளடக்குகின்றது.

## தொழிலின்மை

**தொழிலின்மை வீதமானது 2017இல் பதிவுசெய்யப்பட்ட 4.2 சதவீதத்திலிருந்து 2018இல் 4.4 சதவீதத்திற்கு அதிகரித்திருந்ததுடன், பெண்கள், இளைஞர் மற்றும் கல்வியினால் தேர்ச்சிபெற்ற வகைகளில் உயர்ந்தளவிலான தொழிலின்மை வீதங்கள் பதிவுசெய்யப்பட்டன.** இலங்கைக்கு உயர்ந்தளவான பெண்கள் தொழிலின்மை வீதத்துடனான தாழ்ந்தளவிலான பெண்கள் தொழிற்படை பங்கேற்பு வீதம் என்பன முக்கிய பிரச்சனைகளாக காணப்படுவதுடன் பொருளாதார ரீதியில் செயற்பாட்டிலுள்ள பெண்களுக்காக சமத்துவமான பங்குகொள்ளும் களத்தினை உருவாக்கும் நோக்குடன் இந்தப் பிரச்சனைகளுக்கு உடனடியான கொள்கைத் தலையீடுகள் அவசியமாகின்றன. இளைஞர்களுக்கிடையிலான தொழிலின்மை வீதத்தின் அடிப்படையில், 2018இல் உயர்ந்த அளவிலான தொழிலின்மை வீதங்களாக 21.4 சதவீதம் மற்றும் 10.4 சதவீதம் என்பன முறையே 15-24 ஆண்டுகள் மற்றும் 25-29 ஆண்டுகள் வயதுப் பிரிவில் பதிவுசெய்யப்பட்டன. கல்வித் தகைமைகளின் அடிப்படையில், 2017இல் பதிவுசெய்யப்பட்ட 8.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் க.பொ.த.உயர்தர மற்றும் அதற்கு மேலான பிரிவின் தொழிலின்மை வீதமானது 2018இல் 9.1 சதவீதத்தினை பதிவுசெய்தது.

**திறன் பொருத்தப்பாடின்மையானது தொழிலாளர் பற்றாக்குறையை விளைவித்ததுடன், குறிப்பிட்ட கைத்தொழில்களுக்காக தொழிலாளர்களை இறக்குமதி செய்யப்படவேண்டிய அவசியத்தையும் ஏற்படுத்தியது.** திறன் இடைவெளிகளுக்கு மேலதிகமாக, இளம் சந்ததியினர் வழமையான அல்லது கைகளினால் செய்யப்படும் தொழில்களுக்கு மாறாக வழக்கமற்ற மற்றும் அறிவாற்றல் சார்ந்த தொழில்களை விருப்பப்படுவதால் தொழில் தேடுபவர்களின் எதிர்பார்ப்பிலும் தொழில் தேவைப்பாடுகளுக்கும் இடையில் ஒரு பாரிய இடைவெளியினை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. மேலும், துண்டுகளாக்கப்பட்ட மற்றும் தற்காலிகமாக தன்மையுடைய வேலைச் செயற்றிட்டங்களின் பிரதானமான காரணத்தினால் தகைமையுள்ள தொழில் தேடுபவர்களுக்கு மத்தியில் கட்டடவாக்கக் கைத்தொழில் போன்ற கைத்தொழில்களின் தொழில்நிலையில் குறைந்தளவிலான கவர்ச்சி உணரப்பட்டது. ஆகையால், விரிவடைகின்ற கட்டடவாக்க கைத்தொழில் துறையில் வளர்ந்துவரும் தொழிலாளர் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்வதற்கு பிரதானமாக சீனா, இந்தியா, நேபாளம் மற்றும் மியன்மார் போன்ற நாடுகளிலிருந்து தொழிலாளர் இறக்குமதி செய்யவேண்டிய நிலைக்கு அதிகாரிகள் கட்டாயப்படுத்தப்பட்டனர். எவ்வாறாயினும், தொழிலாளர் நோக்குடைய தயாரிப்பு நடவடிக்கைகளிலிருந்து அகன்று செல்லும் செயற்பாடுகளுக்கு உபாயமாக தன்னியக்கத் தயாரிப்பு செயன்முறைகள் மற்றும் தொழிற்படையின் திறனினை

வரைபடம் 4.14
தொழிலின்மை வீதம் (%)




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

அட்டவணை 4.10
### தொழிலின்மை வீதம் (அ) (ஆ)

| வகை | 2017 | 2018 (இ) 1 ஆம் காலாண்டு | 2 ஆம் காலாண்டு | 3 ஆம் காலாண்டு | 4ஆம் காலாண்டு | ஆண்டு |
|---|---|---|---|---|---|---|
| **அனைத்து** | 4.2 | 4.5 | 4.6 | 4.1 | 4.6 | 4.4 |
| பால் வகைப்படி | | | | | | |
| ஆண் | 2.9 | 2.9 | 3.1 | 2.8 | 3.2 | 3.0 |
| பெண் | 6.5 | 7.4 | 7.4 | 6.6 | 7.1 | 7.1 |
| கல்விமட்ட அடிப்படையில் | | | | | | |
| ஆண்டு 5 மற்றும் அதற்கு கீழ் | ... | ... | ... | ... | ... | ... |
| ஆண்டு 6-10 | 2.8 | 3.0 | 3.5 | 2.4 | 2.5 | 2.9 |
| க.பொ.த (சா/த) | 5.9 | 5.3 | 4.8 | 4.8 | 6.1 | 5.2 |
| க.பொ.த (உ/த) மற்றும் அதற்கு மேல் | 8.1 | 9.5 | 8.9 | 9.5 | 8.7 | 9.1 |
| வயது அடிப்படையில் | | | | | | |
| 15-19 | 21.0 | 23.7 | 28.5 | 22.5 | 31.2 | 26.5 |
| 20-24 | 17.8 | 21.2 | 20.9 | 18.7 | 19.6 | 20.1 |
| 25-29 | 9.5 | 10.7 | 10.8 | 10.6 | 9.5 | 10.4 |
| 30-39 | 2.7 | 3.3 | 3.3 | 2.7 | 2.6 | 3.0 |
| 40 உம் அதற்கு மேலும் | 0.9 | 0.7 | 0.6 | 0.6 | 1.0 | 0.7 |

(அ) 15 வயதும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகை
(ஆ) 2016 யூலையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம் 2011 இலிருந்தவாறான மீள்நிறையிடப்பட்ட மற்றும் திருத்தியமைக்கப்பட்ட தொழிற்படை தரவுகளை வெளியிட்டது.
(இ) தற்காலிகமானது.

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

மேம்படுத்துதல், மீளமைத்தல் போன்ற நீண்டகால கொள்கை வழிமுறைகளை குறைந்த செலவிலான தொழிலாளர்களை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக நடைமுறைப்படுத்த முடியும்.


**மனித மூலதனமானது ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் ஒரு முதன்மையான செய்படுத்தியாக அடையாளங் காணப்பட்டுள்ள வகையில், இலங்கையின் பெரும்பகுதியான சேர்த்துக்கொள்ளப்படாத திறமைகளைச் சிறப்பாக பயன்படுத்துவது மிகவும் இன்றியமையாததாக இருக்கின்றது.** ஆகையால், திறன்மிக்க தொழிலாளர் வழங்கலின் நிலைத்திருக்கும் தன்மையை கட்டியெழுப்புவதற்கு பாடசாலையிலிருந்து வெளியேறியவர்களை அரச நிதியிடல் அல்லது நன்கொடையாளர் நிதியிடலூடான திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நோக்கிக் கவருவதனை நிச்சயப்படுத்திக்கொண்டு அரசாங்கமானது தற்போதுள்ள தொழிற்படையின் திறன்களை மேம்படுத்துவதற்கு அல்லது மீளமைப்பதற்கு பொது-தனியார் பங்குடமைகளை ஒழுங்குசெய்ய முடியும். அவ்வாறான திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் திறன் இடைவெளிகளைக் குறைப்பதுடன் இளைஞர்கள் உற்பத்தித்திறன் குறைவான தொழில்களில் செயற்படும் சந்தர்ப்பங்களையும் குறைவடையச் செய்யும். மேலும், கல்வி பொதுத்தராதர சாதாரண தரத்திற்குப் பிறகு கல்வியினை தொடரமுடியாத நபர்களுக்கு தொழில்நுட்ப, தொழில் முறையான மற்றும் சமூக திறன்களை வழங்குவதன் பிரதான நோக்கத்துடன் அரசாங்கமானது மொத்த கட்டாயப்படுத்தப்பட்ட கல்வி ஆண்டுகளை 13 ஆண்டுகளுக்கு அதிகரிப்பதற்கு முன்மொழிவுகளை எடுத்துள்ளது.

## வெளிநாட்டுத் தொழில்நிலை

**வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக வெளிச்சென்ற பெண்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்த போதிலும் மொத்த வெளிச்சென்ற எண்ணிக்கைகள் சிறிதளவில் சரிவடைந்திருந்தது.** அதன்படி, வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்காக வெளிச்சென்ற ஆண்களின் எண்ணிக்கை 2017இன் 139,268 இலிருந்து 2018இல் 129,774 இற்கு 6.8 சதவீதத்தினால் குறைவடைந்தது. இதற்குமாறாக, குறிப்பாக 35-44 ஆண்டுகள் வயதுப் பிரிவில் வீட்டுப் பணிப்பெண்கள் பிரிவில் வெளிச்சென்றிருந்த பெண்களின் அதிகரிப்பினால் உதவியளிக்கப்பட்டு 2017இன் 72,724 இலிருந்து வெளிச்சென்ற பெண்களின் எண்ணிக்கை 12.3 சதவீதமாக அதிகரித்து 2018இல் 81,685ஆகக் காணப்பட்டது. 2018இல் திறனற்ற வெளிச்செல்லுகைகள் 15.3 சதவீதத்தினால் சரிவடைந்திருந்த போதிலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக வெளிச்சென்ற மொத்த எண்ணிக்கையில் திறனற்ற மற்றும் வீட்டுப் பணிப்பெண்கள் வகையானது 55.2 சதவீத பங்கினை இன்னும் வகைகூறுகின்றது. வயது குறைந்த பல பெண்கள் போலியான மற்றும் மோசடியான ஆவணங்களுக்கூடாக முகவர்களால் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக அனுப்பிவைக்கப்படுகின்றபடியால், வெளிநாட்டு வேலைவாய்ப்பினை ஒழுங்குமுறைப்படுத்தவும் மனித ஆட்கடத்தலைக் கட்டுப்படுத்துவதற்கும் ஒரு புதிய சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றது.

**திறனற்ற வெளிச்செல்லுகைகளை குறைக்கும் வேளையில் பல்வேறுபட்ட துறைகளில் திறன்சார்ந்த மற்றும் திறனுள்ள தொழிலாளர்களின் வளர்ந்துவருகின்ற சந்தையினை இலங்கையானது பயன்படுத்திக்கொள்ளமுடியும்.** தாதித் தொழில், மருத்துவம், தகவல் தொழில்நுட்பம், நிதியியல், கணக்கீடு, முகாமைத்துவம், பொறியியற்துறை போன்ற துறைகளையும் மற்றும் சுற்றுலா, வான்வழி மற்றும் தரைவழிப் போக்குவரத்து, உயர் தொழில்நுட்பத் தயாரிப்பு,

வரைபடம் 4.15
### திறமை அடிப்படையில் வெளிநாட்டு தொழில் நிலைக்கான வெளிச்செல்கைகள்




*மூலம்:* இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

கட்டடவாக்கம், நலப்பராமரிப்பு போன்ற கைத்தொழில்களையும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைத் தேடிக்கொண்டிருக்கின்ற இலங்கையருக்கு ஒழுங்கு முறையான பயிற்சியினை வழங்குவதன் மூலம் பயன்படுத்திக்கொள்ள முடியும். பிலிப்பைன்ஸ், பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான், சீனா மற்றும் ஏனைய ஆசிய நாடுகளுக்கு முன்னதாக நிலைத்திருப்பதற்கு, பன்னாட்டுச் சந்தைகளின் கேள்விக்கு ஏற்றவாறு வழங்குகின்ற தொழிலாளர்களின் திறனை உறுதிப்படுத்துவதற்கு பன்னாட்டு நியமங்களுக்கு ஏற்றவாறு தொழில்துறை மற்றும் நிபுணத்துவ பயிற்சி செயன்முறைகளை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கையானது தேவையான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

**இலங்கைக்கான பிரதான வெளிநாட்டு வேலைவாய்ப்பு இலக்காக மத்திய கிழக்கு பிரதேசம் தொடர்ந்தும் காணப்பட்டதுடன் இது மொத்த வெளிச்செல்லுகைகளில் ஏறத்தாழ 88.2 சதவீதத்திற்கும் வகைகூறியது.** ஏறத்தாழ 97.4 சதவீதமான வீட்டுப் பணிப்பெண்களும் 78.0 சதவீதமான திறனற்ற தொழிலாளர்களும் சவூதி அரேபியா, கட்டார், குவைத் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் போன்ற மத்திய கிழக்கு நாடுகள் மீது கவனம் செலுத்தியிருந்தனர். பால் ரீதியான வெளிச்செல்லுகைகளின் அடிப்படையில், 85.0 சதவீதமான வெளிச்சென்ற ஆண்களும் 93.3 சதவீதமான வெளிச்சென்ற பெண்களும் மத்திய கிழக்கு நாடுகளினை கவனம் செலுத்தியிருந்தனர்.

**வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களின் பிரதான மூலமாக காணப்படுகின்ற தனியார் தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் வறுமையைக் குறைப்பதற்கான வருமானத்தினை உருவாக்குகின்றமை மற்றும் தொழிலின்மை வீதத்தைக் குறைப்பதற்கு வகிக்கின்ற முக்கியமான பங்கு போன்ற காரணங்களினால் இலங்கைப் பொருளாதாரத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பானது ஒரு பாரிய தாக்கத்தைக் கொண்டிருக்கின்றது.** எவ்வாறாயினும், பொருளாதார சுருக்கங்கள், அரசியல் அமைதியின்மை மற்றும் மோதல்கள், இடம்பெயர் தொழிலாளர்களைக் கட்டுப்படுத்துகின்ற கொள்கை மாற்றங்கள், தன்னியக்க முறையான மற்றும் பிளவுபட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் தொழிலாளர் ஏற்றுமதி நாடுகளுக்கிடையிலான போட்டி என்பவற்றிலிருந்து ஏற்படுத்தப்பட்ட வெளிநாட்டு தொழிலாளர் சந்தையிலான தொழிலாளர் கேள்வி மீதான சாதகமான மாற்றங்களின் காரணத்தினால் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களில் பிரதான மூலமாக தனியார் பணவனுப்பல்கள் மீதான சார்ந்திருப்பு இலங்கைப் பொருளாதாரத்தில் அச்சுறுத்தலை ஏற்படுத்தும். இதற்கு மேலாக, பெண்களின் இடம்பெயர்வுகளால் சார்ந்திருக்கின்ற சமூகப் பிரச்சனைகள் மற்றும் சமூகச்செலவுகள், சுரண்டல்கள், கொடுப்பனவு செய்யப்படாமை அல்லது குறைவான கொடுப்பனவுகள், உடல் ரீதியான துன்புறுத்தல்கள் மற்றும் ஏனையவை போன்ற மனித உரிமை மீறல்கள் இலங்கையின் பல்வேறு கைத்தொழில்களிலான தொழிலாளர் பற்றாக்குறை என்பன வெளிநாட்டு செலாவணி வருவாய்களினை அதிகரிப்பதற்கு தொழிலாளர்கள் பணவனுப்பல்கள் மீது அதிகமாக சார்ந்திருப்பதை குறைக்குமாறு வலியுறுத்துகின்றன. அதன்படி, திறனுள்ள மற்றும் திறன்சார்ந்த வகையிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக வெளிச்செல்பவர்கள் மீதான வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான தந்திரோபாய வழிமுறை தேவைப்படும் வேளையில், விசேடமாக பணிப்பெண்கள் மற்றும் திறனற்ற வகையிலுள்ளவர்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக மொத்த வெளிச்செல்லுகைகளைக் குறைத்தல் வேண்டும்.

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தொழிலாளர் புலம்பெயர் செயன்முறைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் மற்றும் அவர்களையும் அவர்களுடைய குடும்பத்தில் நிலைமையும் ஸ்திரப்படுத்துவதற்கும் பல்வேறு வழிமுறைகளைத்**

அட்டவணை 4.11
வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்கான வெளிச்செல்கைகள்

| வெளிநாட்டு தொழில்வாய்ப்பு | 2016 | | 2017 (அ) | | 2018 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % பங்கு | எண்ணிக்கை | % பங்கு | எண்ணிக்கை | % பங்கு |
| மொத்த தொழிலிலுள்ளோர் | 242,816 | 100.0 | 211,992 | 100.0 | 211,459 | 100.0 |
| மூலத்தின்படி | | | | | | |
| உரிமம்பெற்ற முகவர்கள் | 87,982 | 36.2 | 68,319 | 32.2 | 66,924 | 31.6 |
| ஏனையோர் | 154,834 | 63.8 | 143,673 | 67.8 | 144,535 | 68.4 |
| பால் வகையின்படி | | | | | | |
| ஆண்கள் | 160,306 | 66.0 | 139,268 | 65.7 | 129,774 | 61.4 |
| பெண்கள் | 82,510 | 34.0 | 72,724 | 34.3 | 81,685 | 38.6 |
| மனிதவலு வகையின் படி | | | | | | |
| தொழில் வல்லுனர்கள் | 6,578 | 2.7 | 6,379 | 3.0 | 7,210 | 3.4 |
| நடுத்தர மட்டம் | 8,234 | 3.4 | 7,127 | 3.4 | 7,748 | 3.7 |
| எழுத்துவினைஞர் மற்றும் தொடர்பானோர் | 10,862 | 4.5 | 9,271 | 4.4 | 10,021 | 4.7 |
| தேர்ச்சிபெற்ற தொழிலாளர் | 76,545 | 31.5 | 68,980 | 32.5 | 67,053 | 31.7 |
| ஓரளவு தேர்ச்சிபெற்ற தொழிலாளர் | 3,926 | 1.6 | 3,297 | 1.6 | 2,770 | 1.3 |
| தேர்ச்சியற்ற தொழிலாளர் | 71,656 | 29.5 | 61,054 | 28.8 | 51,719 | 24.5 |
| வீட்டுப் பணிப் பெண்கள் | 65,015 | 26.8 | 55,884 | 26.4 | 64,938 | 30.7 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

அட்டவணை 4.12
நாடுகளின் அடிப்படையில் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கான வெளிச்செல்கைகள்

| நாடு | 2017 (அ) | | 2018 (ஆ) | | மாற்றம் (ஆ) | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பங்கு | எண்ணிக்கை | பங்கு | எண்ணிக்கை | சதவீதம் |
| சவுதி அரேபியா | 37,745 | 17.8 | 35,866 | 17.0 | -1,879 | -5.0 |
| கட்டார் | 56,637 | 26.7 | 50,774 | 24.0 | -5,863 | -10.4 |
| குவைத் | 37,410 | 17.6 | 46,951 | 22.2 | 9,541 | 25.5 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | 36,667 | 17.3 | 32,836 | 15.5 | -3,831 | -10.4 |
| ஏனையவை | 43,533 | 20.5 | 45,032 | 21.3 | 1,499 | 3.4 |
| மொத்தம் | 211,992 | 100.0 | 211,459 | 100.0 | -533 | -0.3 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

**தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.** அதன்படி, இலங்கையின் இடம்பெயர் தொழிலாளர்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்பின் நம்பிக்கையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் சட்ட விரோதமாக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளின் மீதான 155 திடீர் சோதனைகளை மேற்கொண்டதுடன் சட்டத்தை மீறிய சட்ட விரோதமான முகவர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மீது 2018இல் 213 நீதிமன்ற வழக்குகளையும் தொடுத்திருந்தது. நலப்பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளின் அடிப்படையில், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் 211,093 எண்ணிக்கையான இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் சார்பில் காப்புறுதி நிறுவனத்திற்கு 138.25 மில்லியன் ரூபாவினை செலுத்தியிருந்ததுடன், இடம்பெயர்ந்த தொழிலாளர்களின் 2,019 குழந்தைகளுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்காக 49.27 மில்லியன் ரூபாவினை செலவு செய்து இருந்ததுடன், மொத்தமாக 25 வெளிச்சென்ற தொழிலாளர்களின் அவர்களுடைய வெளிநாட்டில் தங்கியிருந்த காலத்தில் சந்தித்த பிரச்சனைகள் காரணமாக தொழிலாளர் நலன்புரி நிதியிலிருந்து மற்றும் காப்புறுதி திட்டத்திலிருந்து 0.97 மில்லியன் ரூபாவினை உபயோகித்து தாய்நாட்டிற்கு திருப்பி அழைத்து வந்திருந்தமை மற்றும் பல்வேறுபட்ட பிரச்சனைகள் மீதான இடம்பெயர்ந்த தொழிலாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற 3,754 முறைப்பாடுகளை நிவர்த்தியும் செய்திருந்தது. மேலும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், மத்திய கிழக்கு, ஐரோப்பா மற்றும் சிங்கப்பூர், சைப்பிரஸ், ஹொங்கொங் மற்றும் மாலைதீவுகள் போன்ற கிழக்காசிய நாடுகள் என்பவற்றிற்கு தொழில்நிலைக்காக செல்கின்றவர்களுக்கு இலங்கையர்களுக்கான வெளிச்செல்கைக்கு முன்னரான பயிற்சியினை கண்டிப்பான தேவையாக 'தேசிய தொழில்முறைத் தகைமை மட்டம் 3' இனை அறிமுகப்படுத்தியிருந்தது. இதற்குமேலாக, இடம்பெயர் தொழிலாளர்களுக்கு வசதியளிப்பதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் செயன்முறைகளை நாடளாவிய ரீதியில் மேம்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு மாகாணத்திலும் இடம்பெயர் வள நிலையங்களை அமைப்பதற்கு மேலதிக வழிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

## தொழிலாளர் உறவுகள் மற்றும் தொழிற்சந்தை சீர்திருத்தங்கள்

**ஆர்ப்பாட்டங்களின் எண்ணிக்கைகள் 48.5 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்திருந்ததுடன் தொழிலாளர்களின் ஈடுபாடு 14.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ள காரணத்தினால் தனியார் துறையில் தொழிலாளர் உறவுகள் 2018இல் சரிவடைந்திருந்தது.** எவ்வாறாயினும், பரிசீலனைக்குள்ள ஆண்டுப்பகுதியில் வேலைநிறுத்தங்கள் காரணமாக இழக்கப்பட்ட மனித நாட்களின் எண்ணிக்கை 14.4 சதவீதத்தினால் சரிவடைந்தது. அதன்படி, 2018இல் 12,485 தொழிலாளர்கள் 49 வேலைநிறுத்தங்களில் ஈடுபட்டதுடன் 51,423 மனித நாட்கள் இழப்பிற்கும் வகைகூறினர். வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை மற்றும் தொழிலாளர்களின் ஈடுபாடு என்பன அதிகரித்தமைக்கு பிரதானமாக பெருந்தோட்டத் துறையில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்த வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கையும் தொழிலாளர்களின் ஈடுபாடும் காரணமாக அமைந்தன. இதற்குமாறாக, அரசுசார் நிறுவனங்கள் மற்றும் ஏனைய தனியார் நிறுவனங்களில் பதிவுசெய்யப்பட்ட வேலை நிறுத்தங்கள் சிறிதளவான 4.8 சதவீதத்தினால் மாத்திரமே அதிகரித்திருந்த வேளையில், ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் எண்ணிக்கை மற்றும் இழக்கப்பட்ட மனித நாட்கள் என்பன முறையே 34.2 சதவீதம் மற்றும் 66.5 சதவீதம் என்பவற்றினால் சரிவடைந்திருந்தன. பகிரங்கமாக கிடைக்கத்தக்கதாகவுள்ள தரவுகளின் அடிப்படையில், பொதுத்துறை நிறுவனங்களின் தொழிலாளர்களினால் பல்வேறு வகையான வேலை நிறுத்தங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் குறிப்பாக நலம், கல்வி, தபால் மற்றும் போக்குவரத்து துறைகளில் காணப்பட்டது.

**பல்வேறு சீர்திருத்தங்கள் மற்றும் சட்ட ரீதியான முன்னேற்பாடுகளை அறிமுகப்படுத்துவதனூடாக வேலைத்தள ஒத்துழைப்பு மற்றும் தொழில்துறை இணக்கத்தினையும் மேம்படுத்தும் பொருட்டு 2018ஆம் ஆண்டுப்பகுதியில் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சினால் பல்வேறு வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.** தனியார் துறை பெண் தொழிலாளர்களின் மகப்பேற்று நன்மைகளை விரிவுபடுத்துவதற்கு 1939ஆம் ஆண்டு 32ஆம் இலக்க மகப்பேற்று நன்மைகள் கட்டளைச் சட்டம் மற்றும் 1954ஆம் ஆண்டு 19ஆம்

அட்டவணை 4.13
தனியார்துறைக் கைத்தொழில்களில் வேலை நிறுத்தங்கள்

| ஆண்டு | பெருந்தோட்டம் | | | ஏனையவை (அ) | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை |
| 2015 | 31 | 10,427 | 70,697 | 20 | 4,488 | 11,597 | 51 | 14,915 | 82,294 |
| 2016 | 26 | 11,185 | 85,637 | 15 | 10,167 | 18,690 | 41 | 21,352 | 104,327 |
| **2017 (ஆ)** | **12** | **1,885** | **5,643** | **21** | **9,027** | **54,436** | **33** | **10,912** | **60,079** |
| 1ஆம் காலாண்டு | 3 | 343 | 1,011 | 9 | 3,344 | 23,258 | 12 | 3,687 | 24,269 |
| 2ஆம் காலாண்டு | 6 | 767 | 2,632 | 6 | 2,401 | 6,452 | 12 | 3,168 | 9,084 |
| 3ஆம் காலாண்டு | 1 | 335 | 1,340 | 5 | 2,682 | 22,926 | 6 | 3,017 | 24,266 |
| 4ஆம் காலாண்டு | 2 | 440 | 660 | 1 | 600 | 1,800 | 3 | 1,040 | 2,460 |
| **2018 (இ)** | **27** | **6,545** | **33,212** | **22** | **5,940** | **18,211** | **49** | **12,485** | **51,423** |
| 1ஆம் காலாண்டு | 6 | 886 | 6,152 | 7 | 1,706 | 5,791 | 13 | 2,592 | 11,943 |
| 2ஆம் காலாண்டு | 6 | 1,073 | 6,606 | 2 | 690 | 4,170 | 8 | 1,763 | 10,776 |
| 3ஆம் காலாண்டு | 7 | 703 | 3,759 | 8 | 1,010 | 3,181 | 15 | 1,713 | 6,940 |
| 4ஆம் காலாண்டு | 8 | 3,883 | 16,695 | 5 | 2,534 | 5,069 | 13 | 6,417 | 21,764 |

(அ) அரசசார் நிறுவனங்களும் மற்றும் ஏனைய தனியார் நிறுவனங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

*மூலம்:* தொழிலாளர் திணைக்களம்

இலக்க கடை மற்றும் அலுவலக தொழிலாளர்கள் சட்டம் ஆகிய இரண்டிலும் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. அதன்படி, பிள்ளைகளின் எண்ணிக்கையைக் கவனத்திற்கொள்ளாமல் கொடுப்பனவுடன் கூடிய 84 வேலைநாட்கள் மகப்பேற்று விடுமுறை வழங்கப்படமுடியும். அதற்கு மேலதிகமாக, பெண் தொழிலாளர்களுக்கான பாலூட்டும் நேரத்தினை வழங்குவதற்கு சட்ட ரீதியான முன்னேற்பாடுகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. தனியார் துறை தயாரிப்பு கைத்தொழில்களுக்கான ஐந்து நாட்கள் வேலை வாரத்தினை பயிற்சி செய்வதற்கு நிர்வாக தளர்வுகள் 2018இல் மேலும் விரிவுபடுத்தப்பட்டன. தேசிய தொழிலாளர் ஆலோசனைச் சபையின் ஆலோசனையுடன் தேசிய குறைந்தளவு கூலியினை திருத்தியமைப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. மேலும், தனியார் துறையிலுள்ள தொழில்நிலையின் விதிகளும் நிபந்தனைகளும் தொடர்பாக தற்போதுள்ள தொழிலாளர் சட்டங்களில் காணப்படுகின்ற ஒழுங்கீனங்கள் மற்றும் வேறுபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு “தனி தொழில்நிலைச் சட்டம்” அறிமுகப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளிக்கப்பட்டது. முழுமையான, உற்பத்தித்திறன் மிக்க பாகுபாடுகளற்ற தொழில்நிலையை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கும், தொழில் தளத்தில் பாலியல் துன்புறுத்தல்களைத் தடுப்பதற்கும் மற்றும் நெகிழ்வான வேலை ஒழுங்குகளை அறிமுகப்படுத்துவதற்கும் சட்ட ரீதியான முன்னேற்பாடுகள் முன்மொழியப்பட்ட சட்டத்தில் சேர்க்கப்படவுள்ளன. மேலும், உள்ளூர் தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்கும் நோக்கில் தொழிலாளர் சட்டத்தில் அவர்களையும் சேர்த்துக்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளிக்கப்பட்டது. கட்டாயப்படுத்தப்பட்ட தொழிலாளர்களினைத் தடுப்பதற்கும் இல்லாதொழிப்பதற்கும் தேவையான வழிமுறைகளை எடுப்பதற்கான செயல்முறைகளை அமைச்சு ஆரம்பித்திருக்கிறது. மேலும், அபாயகரமான தொழில்கள் பட்டியல் சீர்திருத்தப்பட்டு அமைச்சரவை அங்கீகாரத்துக்காக கையளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. தொழில் திணைக்களத்தின் சமூக உரையாடல் அலகானது விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சிப்பட்டறைகள் மற்றும் நாடளாவிய ரீதியிலான கைத்தொழில் மட்டப் போட்டிகள் போன்றவற்றை தனியார் துறையில் தொழில்தள ஒத்துழைப்பு மற்றும் கைத்தொழில் அமைதி என்பவற்றை விருத்திசெய்வதற்கு நடாத்தியது. மேலும், தொழில் திணைக்களமானது உற்பத்தித்திறனை அதிகரிக்கும் வேளையில் தொழில்தர இடர்பாடுகளை குறைக்கும் நோக்கில் சமூக உரையாடல் தளத்தினை ஆரம்பித்திருக்கின்றது. இதற்கு மேலும், கைத்தொழில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தினை மேம்பாடு செய்யும் நோக்கில் இடர்பாடுள்ள தீர்ப்பனவு முறைமையினை உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.



## தொழிலாளர் உற்பத்தித்திறன்

**வேலை செய்யப்பட்ட மணித்தியாலம் ஒன்றிற்கு கூட்டப்பட்ட மொத்தப் பெறுமதியினால் (2010 விலைகளில்) அளவிடப்பட்டவாறான தொழிலாளர் உற்பத்தித்திறன் 2017இல்**

அட்டவணை 4.14
முக்கிய பொருளாதாரத் துறைகளின்படி தொழிலாளர் உற்பத்தித்திறன் (அ)

| விடயம் | 2017 (ஆ) | 2017 (கா1-கா3) (ஆ) | 2018 (கா1-கா3) |
|---|---|---|---|
| நிலையான விலைகளில் (2010) மொத்த பெறுமதி சேர்க்கை ரூ.மில்லியன் | **8,449,194** | **6,226,563** | **6,483,935** |
| வேளாண்மை | 642,366 | 463,578 | 486,068 |
| கைத்தொழில் | 2,495,721 | 1,860,815 | 1,906,916 |
| பணிகள் | 5,311,107 | 3,902,170 | 4,090,950 |
| தொழிலாளர் உற்பத்தித்திறன் ரூ. ‘000 தொழில் செய்த மணித்தியாலத்துக்கு | **464.35** | **459.85** | **500.56** |
| வேளாண்மை | 169.06 | 167.32 | 182.19 |
| கைத்தொழில் | 477.35 | 478.29 | 528.17 |
| பணிகள் | 579.33 | 567.49 | 613.91 |

(அ) தற்காலிகமானது
(ஆ) திருத்தப்பட்டது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**முதல் மூன்று காலாண்டுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட மணித்தியாலம் ஒன்றிற்கு 459.85 ரூபாவிலிருந்து 8.9 சதவீதத்தினால் அதிகரித்து 2018இன் அதேகாலப்பகுதியில் மணித்தியாலம் ஒன்றிற்கு 500.56 ரூபாவாக பதிவுசெய்தது.** மொத்தப் பெறுமதி கூட்டலில் அதிகரிக்கும் அதிகரிப்பிற்கு மேலாக இந்த அதிகரிப்பானது பிரதானமாக தொழிலிலுள்ள குடித்தொகையின் சரிவினால் ஏற்பட்டதாகும். அதன்படி, 2018இன் முதல் மூன்று காலாண்டுப்பகுதியில் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் ஆகிய மூன்று துறைகளினதும் தொழிலாளர் உற்பத்தித்திறன் முறையே 8.89 சதவீதம், 10.43 சதவீதம் மற்றும் 8.18 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், மொத்த தொழிலிலுள்ள குடித்தொகையில் நான்கில் ஒரு பகுதிக்கு சிறிதளவில் மேலான பங்கினை இன்னும் கொண்டிருக்கின்ற வகையில் வேளாண்மைத் துறையின் மொத்த தொழிலாளர் உற்பத்தித்திறன் 2018இன் முதல் மூன்று காலாண்டுப்பகுதியில் மணித்தியாலத்திற்கு 182.19 ரூபாவாக குறிப்பிடத்தக்களவு தாழ்வாகக் காணப்பட்டது. தயாரிப்பு மற்றும் பணிகள் தொழிலாளர் உற்பத்தித்திறன் 2018இன் முதல் மூன்று காலாண்டுப்பகுதியில் மணித்தியாலத்திற்கு முறையே 528.17 ரூபாய் மற்றும் 613.91 ரூபாவாகவும் காணப்பட்டது.

4

**ஒரே அளவான உள்ளீடுகளிலிருந்து அதிகமான பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்வதனூடாக அதிகரிக்கின்ற நுகர்வானது வாழ்க்கைத்தரத்தின், மேம்பாட்டிலே நேரடியாக தொடர்புபட்டிருப்பதால் தொழிலாளர் உற்பத்தித்திறனை மேம்படுத்துவது ஒரு நாட்டிற்கு முக்கியமாக அமைகின்றது.** தாழ்ந்தளவிலான உற்பத்தித்திறன்/ தாழ்ந்தளவிலான வருமான வாழ்வாதாரத்தினுள் அதிகளவிலான குடித்தொகை தொழிலுக்குட்பட்டுள்ளதுடன் வழங்கப்பட்ட மானியங்கள் வேளாண்மைத் துறையில் உற்பத்தித் திறன் மேம்பாட்டிலே இடையூறாகக் காணப்பட்டன. ஆகையால், வேளாண்மை துறையில் தொழிலாளர் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு தொழில்நுட்பத்தினை தழுவுதல் மற்றும் முன்னேற்றப்படுத்துதல், பாவனைக்கு உட்படுத்துகின்ற நிலத்தினை மற்றும் பயிர்களின் கலப்பு என்பவற்றை மீளாய்வு செய்தல் மற்றும் மேலதிக உற்பத்தித்திறன் பயிற்சிகளை நடைமுறைப்படுத்தல் என்பவற்றின் மீது கவனம் செலுத்தப்படவேண்டும். இதற்கு மேலாக, இலங்கையின் தொழிலாளர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்வதற்கு மற்றும் ஒட்டுமொத்தத் தொழிலாளர் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் பொருளாதார வளர்ச்சியினை தூண்டுவதற்கும் வேளாண்மைத் துறையில் கவனம் செலுத்துகின்ற தொழிலாளர்களை கைத்தொழில் மற்றும் பணிகள் நோக்கி மீளமைப்புச் செய்வது அவசியமாகின்றது. இலங்கையில் பணிகள் துறையானது கைத்தொழில் துறைக்கு மேலான உயர்ந்தளவிலான வளர்ச்சி தகைமையினைக் கொண்டுள்ளது என நிரூபித்திருக்கிறது. ஒட்டுமொத்தமாக, தாழ்ந்தளவிலான உற்பத்தித்திறன் கொண்ட வேளாண்மையிலிருந்து அகன்று உயர்ந்தளவிலான உற்பத்தித் திறன் கொண்ட வேளாண்மையை நோக்கி கவனத்தைச் செலுத்துகின்ற் பாரம்பரிய பணிகளிலிருந்து அகன்று தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பம் மற்றும் வியாபார செயல்முறை முகாமைத்துவம் போன்ற புதிய பணிகளை நோக்கிய் மற்றும் கைகளினால் இயக்கப்படுகின்ற அல்லது தாழ்ந்த தொழில்நுட்பத் தயாரிப்பு நடவடிக்கைகளிலிருந்து உயர்வான தொழில்நுட்பத் தயாரிப்பு நடவடிக்கைகளை நோக்கிய கொள்கைகள் வளர்ச்சியைத் தூண்டுவதற்கும் உயர் பெறுமதியிலான தொழில்நிலைகளை உருவாக்குவதற்கும் அவசியமாகின்றது.